ISSN 1391-9504




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கடனுக்குப் பதிலாக நிலம்

ஒல்லாந்த ஆள்பதிகள் தாம் கைப்பற்றிய இடங்களில் இருந்து கிடைக்க வேண்டிய கடன்தொகைகள் கிடைக்கும் வரை அதனை மன்னனுக்கு கையளிக்கக்கூடாது என்று எண்ணினர். அடிக்கடி இந்தக் கடன் குறித்து சிங்கள மன்னனுக்கு நினைவூட்டியபடியே இருந்தனர். எனினும், உள்ள கடன் குறித்து முறையாக கணக்குப் பார்க்கப்படவில்லை. எவ்வித ரசீதோ, பட்டியலோ முன்வைக்கப்படவில்லை. அந்த தொகை எவ்வளவு என்பதுகூட பேசப்படவில்லை. எது எப்படியிருப்பினும், கடன் தொகையை செலுத்தும் அறிகுறி சிறுதுகூடத் தென்படவில்லை. கடன் தொகையைக் கேட்பதும் பதிலாக நிலத்தைக் கேட்பதுமே மாறிமாறி நடந்தேறியது.

இதேவேளை, கோரிக்கைகளை எடுத்துக் கொண்டு கண்டிக்குச் சென்ற பிரதிநிதிகள் எவ்வித தீர்மானமும் இன்றி மீண்டும் திரும்பினர். அவர்கள் ஒல்லாந்த சிறைக் கைதிகளை விடுதலை செய்யக்கூட உரியமுறையில் அக்கறை காட்டவில்லை.

கி.பி 1688 ஆம் ஆண்டு இரண்டாம் விமலதர்மசூரிய மன்னனின் முடிசூடும் வைபவம் நடைபெற்றது. கொழும்பு நகரத்தில் அது குறித்து மகிழ்ச்சிக் கொண்டாட்டங்கள் நடைபெற்றன. இதற்கிடையில், கண்டியிலிருந்து பிரதானி ஒருவர் கொழும்புக்கு வந்தார். அத்துடன், கறுவா உரிக்கும் காலத்திற்கு முன்பதாக கண்டிக்கு தூதுவர் ஒருவரை ஒல்லாந்தர் அனுப்பினர். மன்னனுக்குரிய பிரதேசங்களில் கறுவாப்பட்டை உரிக்கும் உரிமையை பெற்றுக்கொள்ள முடியும் என அவர்கள் அறிவித்தனர்.

இதன்படி, எப்லோஸ் என்பவரே கண்டிக்கு அனுப்பப்பட்டார். அவர் பல கோரிக்கைகளை எடுத்துச்சென்றார். அதன்படி, கடன் தொகையை செலுத்தும்வரை ஒல்லாந்த கிழக்கிந்திய வர்த்தக சங்கத்திற்குச் சொந்தமான இடங்களிலும் துறைமுகங்களிலும் உள்ள அசையாச் சொத்துக்களை வர்த்தக சங்கமே அனுபவிக்கவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் அந்த இடங்களை வர்த்தக சங்கத்திடம் கையளிக்கவேண்டும். இருபக்கமும் கப்பம் செலுத்தாமல், வரி செலுத்தாமல் சுதந்திர வர்த்தகத்தில் ஈடுபட முடியும். கறுவா, மிளகு, யானைத் தந்தம் போன்ற அனைத்தும் சங்கத்தைத் தவிர வேறு எவரும் அதனை விற்கமுடியாது எனவும் அக்கோரிக்கையில் இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைக்காட்சி ரசிகர்களுக்கு எச்சரிக்கை!





உலக நடப்புக்களை நமது காலடிக்கே கொண்டுவரும் பெருமை தொலைக்காட்சியையும் சார்ந்திருக்கின்றது. ஆனால், அண்மையில் வெளியாகியுள்ள ஆய்வு முடிவொன்று அதிகமாக தொலைக்காட்சி பார்ப்பவர்களுக்கு ஓர் எச்சரிக்கை விடுப்பதாக அமைந்துள்ளது. அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ன் நகரிலுள்ள இருதயம் மற்றும் நீரிழிவு மையம் சுமார் 6 ஆண்டுகளாக 11 ஆயிரம் தொலைக்காட்சி ரசிகர்களிடையே நடாத்திய ஆய்வொன்றினை அடுத்தே இந்த அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

ஆய்வு முடிவின்படி, தொடர்ந்து தொலைக்காட்சி பார்ப்பவர்களில் 18% ஆனோர் மாரடைப்பு மற்றும் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டு மரணிக்கின்றனர் என்றும், 9% ஆனோர் புற்றுநோயாலும் 11% ஆனோர் வேறு நோய்களாலும் பாதிக்கப்பட்டு இறந்துள்ளனர் என்றும் தெரியவந்துள்ளது. ஆக, 38% ஆனோர் விரைவில் மரணத்தைத் தழுவியுள்ளனர் என்றும், இவர்களில் பெரும்பாலானவர்கள் தினமும் சுமார் 4 மணிநேரம் தொலைக்காட்சி பார்ப்பவர்கள் என்றும் தெரியவந்துள்ளது.

இந்த ஆய்வில் ஈடுபட்ட வைத்தியர் டன்ஸ்டன் கூறுகையில்; "தொலைக்காட்சித் தொடர்களை விடாமல் பார்ப்பதன் மூலம் அதிகமானோர் (குறிப்பாக பெண்கள்) ஒரே இடத்தில் அமர்ந்தவாறு பல மணிநேரங்களைச் செலவிடுகின்றனர். பொதுவாக மனிதனின் 97% அளவு நேரம் இருந்த இடத்திலேயே கழிகின்றது. இதனால், இருதய நோய்கள், க்ளூக்கோஸ் மாற்றக் கோளாறு, நீரிழிவு, பக்கவாதம் போன்ற நோய்கள் எளிதில் மனிதனை தொற்றிக் கொள்கின்றன" என்றார்.

Vijey விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

## உ/தரத்துக்கு மாணவர்களை அனுமதித்தல்:

# பணம் அறவிடும் அதிபர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை



பாடசாலைகளில் க.பொ.த உயர்தர வகுப்புகளுக்கு மாணவர்களை அனுமதித்துக்கொள்வதற்காக பணம் அறவிடுகின்ற அதிபர்களுக்கு எதிராக கடுமையான சட்டநடவடிக்கை எடுக்கப்படுமென கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

நாட்டின் சகல கல்வி வலயங்களுக்கும் கல்வி அமைச்சினால் இது தொடர்பான சுற்று நிருபமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பணம் கோரும் அதிபர்கள் குறித்து உடனடியாக கல்வி அமைச்சுக்கு அறியத்தரும்படியும் அந்த சுற்றுநிருபத்தில் கோரப்பட்டுள்ளது.

மாணவர்கள் தொடர்பில் வசதிகள் சேவைக்கட்டணம் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்க அங்கத்துவக் கட்டணம் ஆகியவற்றை அறவிடுவதற்கு மட்டுமே பாடசாலை அதிபர்களுக்கு கல்வி அமைச்சு சட்டரீதியாக அனுமதி வழங்கியுள்ளது. இவைதவிர, பெற்றோரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படுகின்ற அனைத்து வகையான கட்டணங்களும் சட்டரீதியற்ற கட்டணங்களாகவே கருதப்படுகின்றன.

மேலும், பெற்றோர் அல்லது நலன்விரும்பிகள் வேறு தேவைகளுக்காக ஒரு பாடசாலைக்கு அன்பளிப்புகளைச் செய்யவிரும்பின், பாடசாலை பௌதீகவளக் கணக்கில் அதனை வைப்புச் செய்ய வேண்டும். அக்கணக்கு பாடசாலை அதிபராலும் கல்விக் காரியாலய அதிகாரி ஒருவராலுமே நடைமுறைப்படுத்தப்படும். இதுதவிர, மாணவர் அனுமதிக்காக பணம் மற்றும் பொருள் அறவிடும் பாடசாலை அதிபர்கள் பற்றி லஞ்ச ஊழல் திணைக்களத்துக்கு அறிவிக்கும் உரிமையும் பெற்றோருக்கு அளிக்கப்பட்டிருக்கின்றது.

அத்துடன், கல்வியில் சிறந்து விளங்கும் மாணவர்களை கல்வியில் பின்தங்கிய பாடசாலைகளில் உயர்தர வகுப்புகளுக்கு அனுமதிப்பதும் தவறாகும். அது பின்தங்கிய பிரதேச மாணவர்களுக்கு இழைக்கும் பெரும் அநீதியாகும். எனவே, இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடும் அதிபர்கள் தொடர்பாகவும் கல்வி அமைச்சுக்கு அறிவிக்க முடியும் எனவும் அந்த சுற்றுநிருபத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.


# நாடெங்கிலும் 2000 தலசீமியா நோயாளிகள்

## வருடத்துக்கு இதனால் பாதிக்கப்பட்ட 80 குழந்தைகள் பிறக்கின்றன

சுகாதார அமைச்சின் தேசிய தலசீமியா நிவாரணத் திட்டத்தினால் நடாத்தப்பட்ட கணக்கெடுப்பொன்றின்படி, இலங்கையில் சுமார் 2000 தலசீமியா நோயாளிகள் இருக்கின்றமை தெரியவந்துள்ளது. மேலும், வருடாந்தம் தலசீமியா நோய்த்தாக்கத்துக்கு உட்பட்ட சுமார் 80 குழந்தைகள் பிறக்கின்றன என்றும் தெரியவந்துள்ளது.

நாட்டின் சகல பிரதேசங்களிலிருந்தும் இந்நோய்த்தாக்கத்துக்கு உட்பட்டவர்கள் இனங்காணப்பட்டபோதும் வடமத்திய, வடமேல், ஊவா மற்றும் மத்திய மாகாணங்களிலிருந்தே பெரும்பாலானவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக கணக்கெடுப்பின் மூலம் தெரியவந்துள்ளது.

தலசீமியா நோயை இனங்கண்டுகொள்வதற்காக 30 மில்லியன் ரூபா பெறுமதியான குருதிப் பரிசோதனை உபகரணங்கள் தற்போதளவில் குருநாகல், பதுளை, அநுராதபுரம் மற்றும் ராகம ஆகிய வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.




# மனத்தாக்கத்துக்குட்பட்ட சிறுவர்களுக்கான அவசர தொலைபேசி சேவை

மனத்தாக்கங்களுக்கு ஆளான பிள்ளைகளுக்கு ஆலோசனைகளை வழங்குவதற்கான அவசர தொலைபேசிச் சேவையொன்றை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை ஆரம்பித்துள்ளது. மன அதிர்ச்சிக்குட்பட்டுள்ள சிறுவர்கள் எவருக்கேனும் அது தொடர்பான ஆலோசனைகள் பெறவேண்டிய தேவை இருப்பின், 1929 எனும் தொலைபேசி இலக்கத்தினை அழுத்துவதன் ஊடாக அந்த சேவையைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

24 மணிநேரமும் இந்த சேவை அமுலில் இருக்கும் என்பதோடு, எந்தவொரு தொலைபேசியிலிருந்தும் இச்சேவைப் பிரிவினருடன் தொடர்புகொள்வதனூடாக பாதிக்கப்பட்டுள்ள சிறுவருக்குத் தேவையான உடனடி ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவும் உள்ளது.

பாதிக்கப்பட்டிருக்கும் சிறுவருக்கு மேலதிக ஆலோசனைகள் தேவை என கருதப்படும்பட்சத்தில், குறித்த சிறுவன்/சிறுமியை நேரடியாக வரவழைத்து, ஆலோசனையைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பும் வழங்கப்படும் எனவும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பணிப்பாளர் ஜகத் வெல்லவத்த தெரிவித்துள்ளார்.

30 நாட்களைக் கொண்ட விசேட தபால் மூல ஆங்கிலப் பாடநெறி
ஆங்கிலம் பேசக் கற்போம் ! வெற்றி பெறுவோம்
நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே எம்முடன் இணைந்து எளிய நடையில் தமிழ் மூல விளக்கத்துடன் ஆங்கிலம் படிக்கலாம்.
பாடநெறியில் இணையும் எல்லோருக்கும் இவைகள் வழங்கப்படும்
பெயர் /முகவரி என்பவற்றை தெளிவாக குறிப்பிட்டு 0773-123 523 க்கு SMS செய்யுங்கள்.




10 பாடத்தொகுதிகள் / Spoken English Video CD ஒன்று
Dialog Sim Card ஒன்று Video cd வழிகாட்டி புத்தகம் / அடையாள அட்டை
Diploma in English சான்றிதழ் ஒன்று என்பன எல்லோம் வழங்கப்படும்.
எமது Diploma சான்றிதழ் உள்நாட்டு வெளிநாட்டு வேலை வாய்ப்பை பெற நேர்முகப்பரீட்சைகளுக்கும் இச்சான்றிதழ் தகுதி பெற்றது
மேலதிக விபரங்களுக்கு பெயர், முகவரியுடன் 20ரூ பெறுமதியான 2 முத்திரை அனுப்பி பெறலாம்.
UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. CALL: 0817 918 981 / 0773 123 523

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருந்தெருக்கள் உருவான விதம்





**1800 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இங்கிலாந்தின் பெருந்தெருக்களை அமைப்பதில் முன்னணி வகித்த இரு கட்டுமானக் கலைஞர்கள் தோமஸ் டெல்போட், ஜோன் லவ்டன் மெகடம் ஆகியோராவர், தோமஸ் டெல்போட் பெருந்தெருக்களை அமைப்பதில் ரோமரின் முறையையே பின்பற்றினார்.**

ஆங்கிலேயர் இலங்கையைக் கைப்பற்றி பெருந்தெருக்களை அமைப்பதற்கு முன்னர் அன்றாட போக்குவரத்துக்கு ஒற்றையடிப் பாதைகளே பயன்பட்டன. மடிகே எனும் கிராம சந்தையும் கிராமிய வர்த்தகமும் அவற்றினூடாகவே நடைபெற்றன. மாடுகள் அல்லது கழுதைகள் மீதே பண்டங்கள் ஏற்றப்பட்டன. அவை பல்வேறு இடங்களுக்கும் கொண்டு செல்லப்பட்டதன் காரணமாக நமது நாட்டில் அக்காலகட்டங்களில் ஒற்றையடிப் பாதைகள் சிறிது சிறிதாக அகலமாகின.

இந்நிலையில் 18 ஆம் நூற்றாண்டில் பிரான்சில் போக்குவரத்து சிறிது முன்னேற்றம் பெற்றிருந்தது. காரணம், அந்நாட்டிலிருந்த பியரே டெசகு என்பவர் தமது நாட்டுப் பெருந்தெருக்களுக்கு அத்திவாரமும் வடிகால்களும் அவசியமென உணர்ந்ததேயாகும். அதன்படி, அவர் 1706 ஆம் ஆண்டு பாதை செப்பனிடும் பணியை ஆரம்பித்தார்.

அதன் பின்னர், பிரித்தானியர் பியரேடெசகுவை உதாரண புருஷராகக்கொண்டு பார்வையற்ற ஒருவரே இங்கிலாந்தின் பெருந்தெருக்களை அமைத்துச் செப்பனிட்டார். இது நம்புவதற்கு கடினமாக இருப்பினும் அதுவே உண்மையாகவும் இருந்தது. அந்தவகையில் ஏழு வயதில் குருடான ஜோன்மெட் கொப் என்பவரே இங்கிலாந்தின் பெருந்தெருக்களை அமைத்தவராவார். அவர் வட இங்கிலாந்தின் யோகஷயர் மற்றும் லென்கஷயர் எனும் பிரதேசங்களிலேயே தொழில் புரிந்தார். அவர் தனது கைத்தடியை நிலத்தில் தட்டிக்கொண்டே பல மைல்கள் நடந்து செல்வார். அவர் அமைத்த பெருந்தெருக்கள் பெறுமதியும் உறுதியும் மிக்கதாகவே விளங்கின. அவர் நூற்றுக்கணக்கான மைல்களுக்குரிய பெருந்தெருக்களை செப்பனிட்டுள்ளார்.

1800 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இங்கிலாந்தின் பெருந்தெருக்களை அமைப்பதில் முன்னணி வகித்த இரு கட்டுமானக் கலைஞர்கள் தோமஸ் டெல்போட், ஜோன் லவ்டன் மெகடம் ஆகியோராவர். தோமஸ் டெல்போட் பெருந்தெருக்களை அமைப்பதில் ரோமரின் முறையையே பின்பற்றினார். அதாவது, வீதிக்குக் கீழ் கருங்கல்லை ஆழமாகப் புதைத்து அதற்கு மேல் சிறு கற்களைப் பரப்புவதாகும். அத்தோடு, உறுதியான அத்திவாரத்தையும் நாட்டினார். ஜோன் லவ்டன் மெகடம் என்பவர் இதில் புதுவகையான முறையைக் கையாண்டார். அதாவது, சிறுகற்களை அவர் பாதையில் 10 அங்குல உயரம் வரை பரப்பினார். அதற்கு மேலாக வாகனங்கள் பயணிக்கும்போது அவற்றின் சக்கரங்களால் கற்கள் தூளாகி சிறிது காலத்தில் வீதி சமதரையாகும் முறைமையைக் கடைப்பிடித்தார். இதுவே 'மெகடமிய்சிங்' என்று அழைக்கப்பட்டது. எனினும், 'டயர்' வாகனங்களுக்கு இது பொருத்தமாக அமையவில்லை.

அதன்பின்னர், பெருந்தெருக்களுக்குத் 'தார்' போடும் முறை உருவானது. சிறுகற்களோடு தாரைக் கலந்து பாதை அமைக்கப்பட்டது. இதில் மேலும் முன்னேற்றம் ஏற்பட்டு கொங்றீட்டால் உருவான பாதைகளும் அமைந்தன. மேலும், நவீன பரிசோதனைகளுக்குப் பின் ஆடம்பர அலங்கார வீதிகளும் அமைந்தன.

இலங்கையின் ஆங்கிலேய ஆளுநர் சேர் எட்வட் பான்ஸ் (1820-1830) அவர்களின் காலத்தில்தான் முதன்முதலாக இலங்கையில் பெருந்தெருக்கள் அமைக்கும் பணி ஆரம்பமானது. முதலில் கொழும்பிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட இப்பணிகள் அம்பேபுஸ்ஸ, கேகாலை, கடுகண்ணாவ ஆகிய நகரங்களுக்கூடாக கண்டி வரை மேற்கொள்ளப்பட்டது. இதற்கு ஐந்து வருடங்கள் பூர்த்தியாகின. 1821 ஆம் ஆண்டு குருணாகலையிலிருந்து கலகெதர வழியாகக் கண்டிக்குப்போகும் வீதி அமைக்கப்பட்டது. 1831 ஆம் ஆண்டு கண்டியிலிருந்து மாத்தளை வழியாக தம்புள்ளைக்கும் வீதி அமைக்கப்பட்டது. 1825 ஆம் ஆண்டு அம்பேபுஸ்ஸ வழியாக ஆரம்பிக்கப்பட்ட பணிகள் குருணாகலையோடு இணைத்து தம்புள்ளையில் முடிக்கப்பட்டது. 1833 ஆம் ஆண்டு திருகோணமலையிலிருந்து கந்தளாய்க்கு வீதி அமைக்கப்பட்டது. பின்னர் கண்டி வீதி பதுளை வரை அமைக்கப்பட்டு பேராதனையிலிருந்து நுவரெலியாவுக்கு இடப்பாதை அமைக்கப்பட்டது. புத்தளத்திலிருந்து குருணாகலை போகும் வழி குருணாகலையிலிருந்து புத்தளத்துக்குப் போக அமைக்கப்பட்டதேயாகும். இதன் பின்னர் அநுராதபுரம் முதல் அரிப்பு வரை வீதி அமைக்கப்பட்டது. கொழும்பிலிருந்து அவிஸ்ஸாவளைக்கு வீதி அமைக்கப்பட்டதால்தான் 'சப்ரகமுவ' மாகாணத்தோடு கொழும்பு இணைந்தது.

1832 ஆம் ஆண்டு கொழும்பிலிருந்து கண்டி வரை குதிரை வண்டிப் பயணம் ஆரம்பமாயிற்று. 1848 ஆம் ஆண்டு வீதி அமைப்புப் பணிகள் இலங்கையில் முடிவுற்றபோதும் இங்கிலாந்து ரீதியிலான செப்பனிடும் பணிகள் தொடரவே செய்தன. அதற்கு நவீனரக வாகனங்கள் பாவனைக்கு வந்ததும் ஒரு காரணமாகும். 1912 ஆம் ஆண்டு 4000 மைல்கள் தூர அளவு வரை வீதிகள் இலங்கையில் அமைக்கப்பட்டிருந்தன. வடக்கு-கிழக்கு-தெற்குக்கான பாதைகளும் இதில் அடங்கும்.

**ஏ.ஜே.எம்.நிழாம்**








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றல் தொடர்பான கொள்கைகள்




**2. பவ்லோவின் பழைய நிபந்தனைப்பாட்டுக் கொள்கை (Pavlov's classical theory):**

விலங்கினங்கள் ஆக்க நிலையுறுத்தம் மூலம் சிறப்பாகக் கற்றுக்கொள்கின்றன என்ற உண்மையைப் பரிசோதனை வாயிலாக முதன்முதலில் விளக்கியவர் பவ்லோவ் ஆவார். இவர் தன் பரிசோதனையின் மூலம் நாய்களிடையே உணவு


பவ்லோவ்


ஸ்கின்னர்

செரிக்கும் முறையினை ஆராயமுற்பட்டார். இவ்வாறு ஆராய்ந்தபோது, பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நாயின் வாயில் இயற்கைத் தூண்டலான அல்லது கட்டுப்படுத்தப்படாத தூண்டலான உணவு வைக்கப்படும்போது நாயின் வாயில் உமிழ்நீர் சுரத்தல் என்பது இயல்பான எதிர்வினை அல்லது கட்டுப்படுத்தப்படாத எதிர்வினை ஆகும். ஆனால், உணவு வாயில் வைக்கப்படும் முன்னரே உமிழ்நீர் சுரத்தல் என்பது இயல்புக்கு மாறுபட்ட அல்லது கட்டுப்படுத்தப்பட்ட எதிர்வினை ஆகும். இதனை அவர் பின்வரும் பரிசோதனை மூலம் தெளிவுபடுத்தினார்.

நாய்க்கு நேரடியாக மாமிச உணவு வழங்கப்பட்டபோது, நாய் உமிழ்நீரைச் சுரந்தது. பின்னர், உணவையும் மணி ஓசையையும் எழுப்பியபோது அது உமிழ்நீரைச் சுரந்தது. இது எவ்வாறு சாத்தியமாகிறது? என்றால், மாமிச உணவு கொடுக்கப்படும் ஒவ்வொரு முறையும் மணி ஓசை எழுப்பப்பட வேண்டும். மணி ஓசையைத் தொடர்ந்து மாமிச உணவு கொடுக்கப்பட வேண்டும். இவ்வாறு பலமுறை அல்லது சில நாட்கள் செய்யும்போது நாய் மணி ஓசை கேட்டதும் மாமிச உணவு இல்லாத நிலையிலேயே அது உமிழ் நீரைச் சுரக்கின்றது.

இதனைப் பின்வரும் படிநிலை மூலம் உணரலாம்.

S (உணவு) ⟶ R(உமிழ்நீர்)
S (உணவு ⟶ R(உமிழ்நீர்)
S (மணியோசை) ↗
S (மணியோசை) ⟶ R(உமிழ்நீர்)

இங்கு S-R தொடர்பு விடுபடுவதால் அல்லது தொடர்ந்து கற்கப்படாமையால் நிபந்தனைப்பாடு அழிகின்றது.

இவர் நிபந்தனைப்படுத்தப்படாத தூண்டிக்காக துலங்கலை நிபந்தனைப்படுத்தப்பட்ட தூண்டிக்காக துலங்கலாக மாற்றி அதனை உறுதிப்படுத்துவதே கற்றல் எனக் குறிப்பிடுகின்றார்.

## கல்வி


## முகாமைத்துவம் - 05

## கற்றலுக்கான ஆலோசனைகள்

**3. ஸ்கின்னரின் தொழிலி நிபந்தனைப்பாட்டுக் கொள்கை (Operant conditioning theory):**

இந்தக் கொள்கையை விளக்குவதற்காக அறை போன்ற அமைப்புடைய சிறிய பெட்டியில் பசியோடு உள்ள எலி ஒன்றை ஸ்கின்னர் விட்டார். எலி பசியோடு இருக்கும் காரணத்தால், அது உணவு பெறும் முயற்சியில் ஈடுபடும். அந்த அறைக்கு வெளியே ஒரு தட்டில் மீன் துண்டு வைக்கப்பட்டது. பசியோடு இருக்கும் எலியானது அந்த அறையைவிட்டு வெளியே வரமுயற்சி செய்கிறது. அறையின் கம்பிகளைப் பிடித்து இழுக்கின்றது. தலையைக் கம்பிகளுக்கிடையே விட்டு வெளியில் வர முயற்சி செய்கிறது. அங்கும் இங்கும் பிராண்டுகிறது. இந்த முயற்சி அல்லது செயல்கள் அனைத்தும் பயனளிக்காமல் போகின்றது.

ஆனால், தற்செயலாக அறையின் ஒரு கம்பியை எலி அழுத்துவதன் காரணமாக கதவு திறந்துகொள்ள, எலி வெளியே வந்து மீன் துண்டை உண்ண ஆரம்பிக்கிறது. உடனே, அந்த எலி மறுபடியும் சிக்கல் அறையினுள் விடப்படுகிறது. அப்போது ருசி கண்ட எலி மீண்டும் சிக்கல் அறையைவிட்டு வெளியே வரத் தீவிரமாகச் செயல்படுகிறது சிறிது நேரத்திற்குப் பின்னர் மீண்டும் தற்செயலாக ஒரு கம்பியை அது அழுத்துவதன் மூலம் கதவு திறந்து-வெளியே வந்து-மீன் துண்டை உண்கின்றது. இவ்வாறு பலமுறை செய்யும்போது எலியானது சிக்கல் அறையைத் திறக்கும் வழியை அதாவது, ஒரு குறிப்பிட்ட கம்பியை அழுத்துவதனைக் கற்றுக்கொள்கிறது. அடுத்த முறை எலி தவறான முயற்சிகளில் ஈடுபடாமல் நேரடியாகக் கதவைத் திறக்க உதவும் கம்பியினை அழுத்தி-கதவைத் திறந்து-வெளியே வந்து-மீன் துண்டை உண்ணக் கற்றுக்கொள்கிறது.




இதன்படி, ஒரு துலங்கலுக்கு வழங்கப்படுகின்ற மீள வலியுறுத்தல் (Reinforcement) மூலமே கற்றல் நடைபெறுவதாக ஸ்கின்னர் (Skinner) குறிப்பிடுகின்றார். துலங்கல் மீண்டும் மீண்டும் நடைபெறக் கூடியவாறு தூண்டியை வழங்குவதே 'மீள வலியுறுத்தல்' எனப்படும்.பாராட்டு,பரிசு வழங்கல், உற்சாகப்படுத்தல் என்பன மீள வலியுறுத்தலின் அடிப்படையில் 3 வகையாகப் பிரிக்கப்படுகின்றன.

i. நேர் மீள வலியுறுத்தல்
ii. எதிர் மீள வலியுறுத்தல்
iii. தண்டனை

(தொடரும்...)

-எம்.ஏ.எஃப்.சப்ரானா

# ஜப்பானில் கங்காரு மர்மம்

பல ஆண்டுகளாக கங்காருக்களின் தோற்றத்திலான விலங்குகள் குறித்து ஜப்பானின் மியாகி மாகாணத்தைச் சேர்ந்த 'மயாமா' மலைப் பிரதேச மக்கள் தகவல்களை வெளியிட்டு வருகின்றனர். 'மார்சுபியாலியா' விலங்கினத்தைச் சேர்ந்த இந்த கங்காருக்கள், உண்மையில் இப்பிரதேசத்தில் வசிக்கின்றனவா? என்பதை ஆராய்ந்து அறிவதற்காக நீண்ட நாட்களாக பலரும் முயன்று வந்தபோதும், அது சாத்தியப்படாமலேயே போனது. எனினும், அண்மையிலிருந்து மீண்டும் வெளிவரத் தொடங்கியுள்ள இச்செய்திகளை அடுத்து உண்மையை நிரூபணம் செய்து கொள்வதற்காக ஆய்வாளர்கள் மீண்டும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கண்களால் கண்ட சாட்சிகளிடமிருந்து பெறப்பட்ட கங்காருக்கள் இப்பிரதேசத்தில் வசிக்கலாம் என்றொரு வாதமும் நிலவுகின்றது. டோக்கியோ நகரத்தில் இருந்து 350 கி.மீ தூரத்தில் வடக்கு நோக்கி அமைந்துள்ள மயாமா பிரதேசத்தில் சுமார் 441 குடும்பங்கள் வாழ்ந்து வருவதாக அந்நாட்டு அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இங்கு சுமார் 1-$1^{1/2}$ மீற்றர் உயரங்களில் பெரிய காதுகளைக் கொண்ட விலங்குகள் சிலவேளைகளில் கண்ணுக் கெட்டிய தூரத்தில் கடந்து செல்வதைக் காணக்கிடைப்பதாக அப்பகுதி மக்கள் கூறி வருகின்றனர்.





"கடந்த சில மாதங்களில் இப்பிரதேசத்தில் கங்காருக்கள் பற்றிய செய்திகள் மட்டும் 30 வரை கிடைத்துள்ளன. இவற்றில் மூன்று சம்பவங்கள் பனிமூட்ட காலமான டிசம்பர் மாதமளவில் நடந்தவைகளாகும்" என்று குறித்த பிரதேசத்தின் அதிகாரியொருவரான டெட்சுயா சசாக்கி குறிப்பிடுகின்றார். "40-60 வயதுக்கிடைப்பட்டவர்களே இவ்வாறான தகவல்களை அதிகம் கூறியுள்ளனர். அவர்கள் கங்காரு போன்ற தோற்றமுடைய விலங்கினம் ஒன்றை அதிகாலையில் வேலைக்குச் செல்லும்போதும் மாலையில் வீடு திரும்பும்போதும் தாம் காண்பதாகக் கூறுகின்றனர்" என்று டெட்சுயா மேலும் தெரிவித்துள்ளார்.




கங்காருக்களின் காட்சிகள் தொடர்பிலான செய்திகள் கடந்த ஏழாண்டுகளாக இப்பிரதேசத்திலிருந்து வெளிவருகின்றன. இதனால், தொலைக்காட்சி மற்றும் பிரதேச ஊடகவியலாளர்கள் தமது கெமராக்களை இங்கு மறைத்து வைத்து கங்காருக்களைப் படம் எடுக்க முயன்றுள்ளனர். எனினும், அம்முயற்சி இதுவரை சாத்தியமாகவில்லை என்பதனால், இந்த விலங்குகள் மர்மம் நிறைந்தவை என்று கருதப்படுகின்றது. அத்துடன், இப்பகுதியின் சில வீடுகளிலும் பாதையோரம் மற்றும் காட்டுப்பகுதிகளிலும் 'கங்காருக்கள் கடந்து செல்லும் இடங்கள்' என்று தெரிவிக்கும் வகையிலான பெயர்ப்பலகைகளும் வைக்கப்பட்டுள்ளன.

ஜப்பானின் பல சரணாலயங்களிலும் கங்காருக்கள் இருக்கின்றபோதும், ஜப்பான் காடுகளில் கங்காருக்கள் இருக்கின்றமை பற்றி இதுவரை அறியப்படவில்லை. இந்நிலையில், இப்பகுதியிலேனும் கங்காருக்கள் உள்ளனவா?, இல்லையா? என்பது இன்றளவிலும் மர்மமாகவே உள்ளது. -(இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலாஸ்காவின்

உலகின் வட துருவத்தில் அமெரிக்க கண்டத்தில் கனடாவிற்கு மேற்கே அமைந்துள்ள பாரிய பிரதேசமே அலாஸ்காவாகும். அலாஸ்கா ஐக்கிய அமெரிக்கா மாநிலங்களில் ஒன்றாகும். இது ஐக்கிய அமெரிக்க தேசத்தின் பகுதியில் தொடர்ச்சியாக இல்லாமல் தனியாக கனடாவின் ஊடே பிரிந்த தனியொரு பிரதேசமாக விளங்குகின்றது.




## வரலாறு

கிரிமியன் யுத்தத்தில் (Crimean War) பெரும் தோல்வி அடைந்த ரஷ்யா, அலாஸ்காவை விற்க முன்வந்தது. பனியும், மலையும், கடலும்,காடும், எரிமலைகளும் நிறைந்த ஒரு நிலப்பகுதியை வாங்க எவருமே முன்வரவில்லை. அப்பொழுது ஐக்கிய அமெரிக்காவின் வெளியுறவு அமைச்சராக இருந்த சீவார்ட் (Seward) என்பவருடன் ரஷ்யர்கள் பேச்சுவார்த்தைகளை நடத்தினர்.

1867 ஆம் ஆண்டு 726,000 அமெரிக்கன் டொலருக்கு அலாஸ்கா வாங்கப்பட்டு ஒப்பந்தம் கையெழுத்தானது. இப்பிரதேசத்தை விலைக்கு வாங்கியதை பல அமெரிக்கர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ரஷ்யர்கள் உபயோகமற்றது என்று புறம் தள்ளிவிட்டதை அமெரிக்கா வாங்குவதா? என்று பலரும் கருதினார்கள்.

## பொன் விளையும் பூமி

19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தான் அலாஸ்கா ஒரு பொன்விளையும் பூமி என்பது தெரியவந்தது. ஏனெனில், அப்பகுதியில் தங்கம் கண்டுபிடிக்கப்பட்டதே இதற்குரிய காரணமாகும். அதன்பின் அலாஸ்காவின் வடமேற்குப் பகுதியின் ஒரு பாகத்திற்கும் தென்மத்தியில் ஒரு நகருக்கும் 'சீவார்ட்' என்று பெயர் சூட்டினார்கள்.

## பல அதிசயங்களின் இருப்பிடம்

இங்கு ஓரிடத்திற்கு செல்லும்பொழுது செல்கின்ற பாதை ஒரு பரந்த வெளியாக இருக்கும். ஆனால், திரும்பி வரும்போது ஒரு பெரிய குளம் அங்கிருக்கும் மழை பெய்யாமல் நீர் எங்கிருந்து வந்தது? அது ஒரு வியப்பான விடயம்தான்.

திடீரென பூமியதிர்ச்சி வந்தது போல் சத்தம் கேட்கும். எங்கோ தொலைவில் பனிப்பாறையிலிருந்து ஒரு பெரிய துண்டு உடைந்து விழும் சத்தம் பல மைல் தூரம் எதரொலிக்கும்.

சாதாரணமாக வெயில் இருக்கும். சிறிது நேரத்தில் முன் அறிகுறி எதுவுமின்றி திடீரென மழை பொழியும். அரை மைல் தூரம் சென்று பார்த்தால் மழை பெய்ததற்கான எவ்வித அறிகுறியுமே இருக்காது. சூரியன் மறைந்துவிட்டது. இருள் சூழப்போகிறது என நினைத்தால் தொடர்ந்து இரண்டு மணி நேரத்திற்கு மங்கலான வெளிச்சம் இருந்துகொண்டே இருக்கும்.

## பனிப்பாறைகளும் நதிகளும்

ஏறக்குறைய ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட 'கிளேஸியர்' என அழைக்கப்படும் பனிப்பாறைகள் அலாஸ்காவில் உள்ளன. அவற்றின் மொத்தப் பரப்பளவு 290,000 சதுர மைல்களாகும்.

## கிளேஸியர் - Glaciers

பனி விழுந்து உருகியது போக, எஞ்சியிருப்பது பனிக்கட்டியாக மாறிவிடுகிறது. மறுபடி அதன்மேல் பனிவிழ அதில் உருகியது போக எஞ்சியது அதன்மேல் படர்ந்து பனிக்கட்டியாகிறது. அவ்வாறு சுழற்சி முறையில் ஆண்டுதோறும் இறுகிய பனிப்பாறைகள்தான் 'கிளேஸியர்' என அழைக்கப்படுகின்றது.

இந்த பனிப்பாறைகளில் ஒன்றான மாலஸ்பினா (Malaspina) எனும் பனிப்பாறை அமெரிக்காவின் ஒரு மாநிலமான ரோட் ஐலேண்டை (Rhode Island) விடப்பெரியது. பீட்மண்ட் (Peidmont) வகைப் பனிப்பாறையான இது மொத்தம் 1500 சதுர மைல் பரப்புடையது.

உலகின் மிக நீளமான நதிகளில் ஒன்றான யூகோன் நதி (Yukon River) அலாஸ்கா பகுதியில் 1854 மைல் நீளம் வரை பாய்கின்றது. தொடர்ந்து கனடாவிலும் பாயும் இந்நதியானது மொத்தமாக 2300 மைல் நீளத்தைக் கொண்டது. அலாஸ்காவில் எந்நேரமும் வெடிக்கக்கூடிய நிலையில் இருக்கும் எரிமலைகள் மாத்திரம் 80 க்கு மேல் இருக்கின்றன.

## பூகம்ப பூமி

கடந்த நூற்றாண்டுகளில் அலாஸ்காவில் மட்டும் 7 ரிச்டர் அளவுக்கு மேற்பட்ட 75 பூமியதிர்ச்சிகள் நிகழ்ந்துள்ளன. 3.5 ரிச்டர் அளவுக்குக்கீழ் வருடத்துக்கு ஆயிரத்துக்கும் மேற்பட்ட பூகம்பங்கள் நிகழ்கின்றன. 1995 ஆம் ஆண்டு மே மாதம் மட்டும் 5 ரிச்டர் அளவில் 540 இற்கும் அதிகமான பூகம்பங்கள் நிகழ்ந்துள்ளன. அலாஸ்காவில் பொய்ன்ட் பேரோ (Point-Barrow) என்றொரு இடம் இருக்கின்றது. இங்கு வருடத்தில் 87 நாட்கள் சூரியன் மறைவதில்லை. அதேபோல், 67 நாட்கள் சில இடங்களில் சூரியன் உதிப்பதில்லை. வந்த வேகத்திலேயே மறைவதும் உண்டு.

## அதிசய மீன்

அலாஸ்காவின் தேசிய உயிரினமாகிய கிங்-சால்மன் (King-salmon) எனும் மீன் இனம் உலகிலேயே மிகச் சுவையான மீன் இனமாகக் கருதப்படுகின்றது. அலாஸ்கா மாநில அரசின் வருமானத்தில் கணிசமான அளவை இந்த மீன் இனம் பெற்றுக்கொடுப்பதோடு, நன்னீரிலேயே இந்த மீன் இனம் உற்பத்தி ஆகிறது என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

'கிங்-சால்மன்' மீன் குஞ்சுகள் தாம் பிறந்த நன்னீர் ஏரிகளில் இருந்து புறப்பட்டு ஆயிரக்கணக்கான மைல் தூரம் பயணம் செய்து கடலை அடைகின்றன. அங்கு வளர்ச்சி அடையும் இவை மூன்று நான்கு ஆண்டுகளின் பின்னர் அங்கிருந்து புறப்பட்டு மீண்டும் தாம் பிறந்த இடத்திற்கே வருகின்றன. இதில் வியப்பான விடயம் என்னவெனில் அருவி எதிர்ப்படும்போது இந்த மீன் மேல் நோக்கிப் பாய்ந்து அருவியின் வேகத்தை எதிர்த்துச் செல்வது அழகிய காட்சியாக இருக்கும்.



இவ்வாறு பாய்ந்து வரும் மீன்களைப் பிடிப்பதற்காகவே நீர் நிலைகள், அருவிகள் ஓரம் கிரிஸ்லி கரடிகள் (Grizzly Bears) காத்திருக்கும். 'சால்மன்' மீன்களை இவை பார்த்ததும் அருவி நீரின் முன் தனது கால்களைத் தூக்கிப் பாய்ந்து மீனைப் பிடித்து, சமநிலை தவறாமல் மீண்டும் தரையில் காலூன்றுவதும் வியப்புக்குரியது தான்.

அந்தவகையில், மீன்பிடிப்பவர்களிடம் இருந்தும் கரடிகள், பருந்துகள் ஆகியவற்றிடமிருந்தும் தப்பிப் பிழைத்து தாம் பிறந்த இடத்துக்கே திரும்பி வரும். இவ்வாறு வருகின்ற சால்மன் மீன்கள் அப்பகுதியின் நீருக்கு அடியில் பள்ளம் தோண்டி முட்டைகளை இடுகின்றன. ஆண் மீன்கள் போட்டி போட்டுக்கொண்டு அம்முட்டைகளைக் காக்கின்றன. மீன் குஞ்சுகள் வெளியே வந்ததும் சில நாட்களில் சால்மன் மீன்கள் இறந்துவிடுகின்றன.

## அதிசய வானம்

அலாஸ்காவின் வடபகுதியில் வருடத்தின் 240 நாட்களுக்கு மேல், இரவு நேரத்தில் 'ஒளிநடனம்' நடைபெறுகிறது. இதற்கு அரோரா போரியாலிஸ் (Aurora Borealis) என்று பெயர். இங்கு வானத்தின் பெரும் பகுதியை நிரப்பிக்கொண்டு தரையை நோக்கி ஒளிக்கற்றைகள் வீசப்படுகின்றன. இதில் இருந்து ஒன்றிரண்டு வண்ணங்கள் அல்ல. மஞ்சள், பச்சை, நீலம், ஊதா உள்ளிட்ட பல வர்ணங்கள் தனியாகவும் இணைந்தும் கலந்தும் விரிந்தும் சுருங்கியும் நீண்டும் வளைந்தும் ஒளி நடனம் நிகழ்கிறது. இருள் மறைய தரையில் அழகிய வண்ண ஒளி நிழல் கம்பளம் விரித்தது போல் காட்சி அளிக்கும். அது ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு தாவிச் செல்லும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிசயங்கள்


யுகோன் நதி

## நீரின் அதிசயம்

எந்த வகையில் நீர் உருக்கொள்ளுமோ, அந்தந்த வகையெல்லாம் அலாஸ்காவில் உண்டு. 660 அடி உயரத்தில் இருந்து விழும் தொடர் அருவி, 'யூகான்' எனும் 2 மைல் அகலத்தில் பாயும் நதி, 30 லட்சம் ஏரிகள் 1000 சதுர மைல் பரப்பிற்கு மேலுள்ள பிரமாண்டமான ஏரிகள், குளங்கள், குட்டைகள் எனும் பலவகை நீர் நிலைகள் இங்குண்டு.

## அதிசயக் கடல்

அலாஸ்காவில் உள்ள கடற்கரையின் நீளம் 33,904 மைல்களாகும். இது அமெரிக்காவின் ஏனைய பகுதிகளில் உள்ள கடற்கரையின் நீளத்தைவிட, இரண்டு மடங்கு அதிகமாகும். இங்கு தரையைக் குடைந்து உள்நோக்கி ஓடும் கடல் முகத்துவாரங்கள் ஏராளம். அத்துடன், அதிகளவு உயரம் எழும்பும் கடல் அலைகள். இந்த அலைகள் நிலநடுக்க நேரத்தில் நூற்றுக் கணக்கான அடிகள் உயர்ந்து நிலத்தை நீர்ப் பகுதியாகவும் நீர்ப்பகுதியை நிலமாகவும் மாற்றி விடுவதுண்டு.

உலகில் அதிக வகையான திமிங்கிலங்கள் அலாஸ்காவில்தான் வாழ்கின்றன. ஸீல், வால்ரஸ், ஆட்டர், கடல் சிங்கம் போன்ற உயிரினங்கள் கடல் பகுதியில் வாழ்கின்றன. இக்கடலின் நடுவே பனிப்பாறைகள் காணப்படுகின்றன.

## பெர்மாஃபொரஸ்ட் (Permafrost)

அலாஸ்காவின் நிலப்பரப்பில் 80 சத விகிதம் உறைபனி நிலமாக (Permafrost) அமைந்துள்ளது. இங்கு பெர்மாஃபொரஸ்ட் என்பது பார்ப்பதற்கு சாதாரண தரை போல் இருக்கும். ஆனால், அது ஒரு மாயத்தோற்றம்தான். பல இடங்களில் மண்தரை 2 அடி ஆழம் வரைதான் இருக்கும். அதன் கீழ் உறைபனி அமைந்திருக்கும். சில இடங்களில் 2 அங்குல ஆழத்துக்குக் கீழ் இந்த உறைபனி காணப்படும். இவ்வாறான உறைபனிகள் பல இடங்களில் 2 அடி முதல் 200 அடி ஆழம் வரை இருக்கும். ஆனால், பேரோ முனையில் 1300 அடி வரை உறைபனி இருக்கும். இங்கு மரங்கள், தாவரம் வளர்வது மிக மிக அரிதாகவே காணப்படுகின்றது.

## மலைகள் நிறைந்த பூமி

அலாஸ்கா மலைகள் நிறைந்த ஒரு பிரதேசமாகும். அமெரிக்காவின் மிக உயரமான 20 மலைச்சிகரங்களில் 17 அலாஸ்காவில் காணப்படுகின்றன. இவை வெயில் அடிக்கும்பொழுது வெள்ளிப் பனிமலைகளாக காட்சி அளிக்கும். அத்துடன், கடலை ஒட்டியும் இங்கு மலைகள் அமைந்துள்ளன. சில பெரிய நகரங்கள் மலைத் தொடர்களுக்கு மத்தியில் உள்ளன. அலாஸ்காவின் தலைநகரான ஜூனிவ் (Juneau) அவ்வாறுதான் அமைந்திருக்கின்றது.

## கலைகளின் பொக்கிஷம்

அலாஸ்காவின் பூர்வீகக்குடிகளான எஸ்கிமோவர் (Eskimo) குளிர் காலங்களில் பொழுதுபோக்குக்காக பல கலைநிகழ்ச்சிகளை நடத்துகின்றனர். குளிரில் இருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ள உரோமம் நிறைந்த மிருகங்களின் தோல்களினால் ஆடை தைத்து அணிகிறார்கள்.

## பேரோ முனை

பேரோ முனைதான் வட துருவத்தில் மனிதன் வாழும் கடைசி இடமாகும். அதற்கு அப்பால் எவரும் வசிப்பதில்லை. அமெரிக்காவின் வட முனை, உலகின் உச்சி என அழைக்கப்படுகின்றது. எஸ்கிமோக்களின் குடியிருப்பு ஆர்க்டிக் வட்டத்தில் இருந்து 340 மைல் வடக்கில் இருக்கிறது. இங்கு மே மாதம் 10 ஆம் திகதி முதல், ஓகஸ்ட் 2 ஆம் திகதி வரை சூரியன் மறைவதில்லை. நொவெம்பர் 18 முதல் ஜனவரி 24 வரை சூரியன் உதிப்பதில்லை.

## கரடிகள்

பனிக்காலத்தில் அங்கு வாழ்கின்ற உயிரினங்கள் மிகுந்த கஷ்டத்தை அனுபவிக்கின்றன. கரடி தன் குட்டிகளோடு குகைக்குள் புகுந்துவிடும். இவற்றுக்கு 6 மாதங்கள் வரை உணவே கிடைப்பதில்லை. அவ்வப்போது வெளிவரும் குட்டிகளுக்கு பால் கொடுக்கும் நேரம் தவிர ஏனைய நேரங்களில் பெண் கரடிகள் தூங்கிக்கொண்டே இருக்கும். குளிர்காலத்தில் ஒரு பெண் கரடியின் நிறை 100 இறாத்தலுக்கு மேல் குறைந்துவிடும். கோடைகாலத்தில் அவை பெரும்பாலும் கிழங்கு வகைகளையே உண்கின்றன. அத்துடன், கரடிகள் அங்கு காணப்படும் ஒருவகை அணில்களையும் பிடித்து உண்கின்றன.

## ஸ்லெட்ஜ் (Sledge)

ஏறக்குறைய ஆறு மாதங்களுக்கு இந்த மலைப்பகுதி மிக அமைதியாக இருக்கும். மார்ச் மாதத்தில் இருந்து உயிரினங்களின் செயற்பாடுகள் சிறிது சிறிதாக ஆரம்பமாகும். வசந்த காலம் வந்தாலும் குளிர் முற்றிலும் மறையாது. இப்பகுதிகளில் நாய்களால் இழுக்கப்படும் ஸ்லெட்ஜ் (Sledge) எனும் சறுக்கு வண்டிகளே பாவனையில் உள்ளன. ஆனால், தற்போது பெற்றோல் மூலம் இயங்கும் நவீன பனிச்சறுக்கு வண்டிகள் புழக்கத்திற்கு வந்துள்ளன.

## உலாவரும் உயிரினங்கள்

மர்மாத் (Marmots) எனும் அணில் போன்ற பெரிய பிராணி ஒன்று இங்கு பிரசித்தி பெற்றது. பார்க்கா (Parka) அணில், 'கேம்ப் திருடர்கள்' எனக் கூறப்படும்


கிங் சால்மன்


கிரிஸ்லி கரடிகள்


ஸ்னோஷு முயல்


கிளேஸியர்

## கெனாய் ஃபிஜோர்ட்ஸ் (Kenai Fjords)

அலாஸ்காவின் ரிசரக்ஷன் வளைகுடா இருக்கும் பகுதியை கெனாய் ஃபிஜோர்ட்ஸ் (Kenai Fjords) என அழைப்பர். இந்தக் கடலில் மிகவும் பிரசித்தி பெற்ற பஃபின்ஸ் (Puffins) என்ற பறவைகள் அதிகமாக வாழ்கின்றன. மிகமிக அழகான இப்பறவைகளின் அலகு தட்டையாக இருக்கும். அலகும் அலகை ஒட்டிய பகுதிகளும் பஞ்சு வைத்து தைத்தது போல் இருக்கும். இதைப் பார்ப்பதற்காகவே பெருந்தொகையானோர் இங்கு வருகின்றனர். நட்சத்திர மீன், கடல் நாரை, கடல் காகம், கடல் வாத்து, மொட்டைக் கழுகு, கோல்டன் கழுகு எனப் பலவகையான உயிரினங்கள் இங்கு வாழ்கின்றன.


எஸ்கிமோக்கள்

## பாடும் பறவை

பொட்டர்ஸ் மார்ஷ் (Potters Marsh) என்ற பகுதியை விலங்குகள் புகலிடமாக 1916 இல் உருவாக்கியுள்ளார்கள். இங்கு 130 வகையான பறவையினங்களைக் காணலாம். லூன் (Loon) வோர்ப்லெர்ஸ் (Warblers) என்னும் பறவைகள் இங்கே புகழ் பெற்றவை. வோர்ப்லெர்ஸ் பறவை இனத்தில் ஆண் பறவைகள் குயில்கள் போன்று பாடும் இயல்புடையன.

சாம்பல் நிற ஜே (Gray Jay) பறவைகள், ஆட்டர்கள், திமிங்கிலங்கள், கறுப்புக் கரடிகள், ஓநாய்கள் கோயோட்ஸ் (Coyotes), மூஸ், டிரெம்பெட்டர் அன்னங்கள் (Trumperter Swan) கிரிஸ்லி கரடிகள், கரீபு, ஸ்னோஷு முயல் (Snowshoe Rabbit) என்பன முக்கியமானவை. இவை குளிர்காலத்தில் வெள்ளையாகவும் கோடையில் பழுப்பாகவும் இருக்கும். இவைகளைத்தவிர, செந்நரிகள் (Red Fox) லிங்க்ஸ் எனும் பூனை போல் இருக்கும் ஒருவகை மிருகம் மற்றும் வெள்ளை ஆந்தை (Boreal Owl) மொட்டைத்தலைக் கழுகு (Bald Eagle) என்பனவும் இங்கு பிரசித்தமாகும்.

-இரஞ்சித் ஜெயகர்



அரோரா போரியாலிஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கென்யா

நைரோபி நகரின் ஒரு பக்கத்தோற்றம்



**அரசு:** ஒரு சட்ட சபைகொண்ட பல கட்சிக் குடியரசு.
**சுதந்திரம்:** ஐக்கிய ராச்சியத்திடமிருந்து-1963 டிசம்பர் 12; சுதந்திரப் பிரகடனம்-1964 டிசம்பர் 12.
**தேசிய பெயர்:** ஜம்ஹுரி யா கென்யா (கென்ய குடியரசு-Republic of Kenya).
**தேசிய விடுமுறை தினம்:** சுதந்திர தினம் டிசம்பர் 12.
**ஜனாதிபதி** (2002): மாய் கிபாகி.
**பிரதமர்:** ரெய்லா ஒடிங்கா.


## புவியியல்

மத்திய கிழக்கு ஆபிரிக்க நாடான கென்யா, இந்து சமுத்திரத்தின் கரையோரத்தில் அமைந்துள்ளது. இதன் குறுக்கே பூமத்திய ரேகை செல்கின்றது. ஆதிமனிதனின் பிறப்பிடங்களில் ஒன்றாகக் கருதப்படும் கென்யா நாட்டின் **வடகிழக்கு**-சோமாலியா; **வடக்கு**-எதியோப்பியா மற்றும் சூடான்; **மேற்கு**-உகண்டா; **தெற்கு**-தன்சானியா என்பன எல்லைகளாக அமைந்துள்ளன.

**மொத்தப்பரப்பு:** 224,961 ச.மைல் (582,650 ச.கி.மீ);



தேசிய இலச்சினை








**நிலப்பரப்பு:** 219,788 ச.மைல் (569,251 ச.கி.மீ).
**தலைநகரமும் பெரிய நகரமும்:** நைரோபி;
**ஏனைய பெரிய நகரம்:** மொம்பாஸா.
**மொத்த சனத்தொகை** (2009): 39,002,772.
**உயர் மையம்:** கென்யா மலை (5,199 மீற்றர்);
**தாழ் மையம்:** இந்து சமுத்திரம்.
**மொழிகள்:** ஆங்கிலம் (உத்தியோகபூர்வ மொழி), ஸ்வாஹிலி (தேசிய மொழி) மற்றும் பல உள்ளூர் மொழிகள்.
**இனங்கள்:** கிக்குயு 22%, லுஹ்யா 14%, லுயு 13%, கெலென்ஜின் 12%, கம்பா 11%, கிஸி 6%, மெரு 6%, ஏனைய ஆபிரிக்கர் 15%; ஐரோப்பியர், ஆசியர் மற்றும் அரேபியர் 1%.
**மதங்கள்:** புரட்டஸ்தாந்து கிறிஸ்தவம் 45%, ரோமன் கத்தோலிக்கம் 33%, உள்ளூர் நம்பிக்கைகள் 10%, இஸ்லாம் 10%, ஏனையவை 2%.
**எழுத்தறிவு:** (2003) 85%. **இணையத்தளக் குறியீடு:** .ke
**தொலைபேசிக் குறியீடு:** +254 **நாணயம்:** கென்யா ஷில்லிங்.
**தேசிய சின்னங்கள்:** மிருகம்-சிறுத்தை மற்றும் ஆபிரிக்க யானை; மலர், மரம், பறவை, விளையாட்டு என்பன பிரகடனப்படுத்தப்படவில்லை.
**தேசிய கீதம்:**

Ee Mungu nguvu yetu
Ilete baraka kwetu
Haki iwe ngao na mlinzi
Natukae na undugu…..என ஆரம்பமாகின்றது.

## வரலாறு

தொல்பொருள் ஆய்வாளர்களின் கருத்தின்படி, 2 மில்லியன் வருடங்களுக்கு முன்பிருந்தே கென்யாவில் மக்கள் வாழ்கின்றனர். கி.பி 700 ஆம் ஆண்டுகளில் அரேபியர்கள் கரையோரப் பிரதேசங்களில் குடியேறினர். 1500 ஆம் ஆண்டுகளில் போர்த்துக்கேயர் இப்பிரதேசங்களை தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்தனர். 40 இற்கும் மேற்பட்ட இனக்குழுக்கள் கென்யாவில் வாழ்கின்றன. அதில் மிகப்பெரிய இனக்குழு 'கிக்குயு' ஆகும். 1890 இல் பிரித்தானிய





ஃபோர்ட் ஜீசஸ்

ஷிமோனி மற்றும் வாசினி தீவு



ஆதிக்கத்திற்குட்பட்டதோடு, தொடர்ந்து ஆயுதப் போராட்டம் ஆரம்பமானது. 1964 இல் குடியரசாகியது. 1992 வரை ஒரே கட்சி ஆட்சி நிலவியது. 1997 இல் அராப்மொய் தலைமையிலான அரசிற்கெதிராக ஜனநாயகம் கோரி பெரும் போராட்டம் எழுந்தது.



ஜனாதிபதி



பிரதமர்

## கலாசாரம்

பல்வேறு கலாசாரங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாக கென்யா விளங்குகின்றது. மிகவும் பிரசித்தி பெற்ற கலாசாரமாகிய 'ஸ்வாஹிலி' கலாசாரம் கரையோரப் பகுதிகளில் காணப்படுகின்றது. வடபகுதி வனம்சார் பகுதிகளில் ஆயர் அல்லது இடையர் சமுதாயத்துக்குரிய தனித்துவமான கலாசாரம் நிலவுகின்றது. பெரும்பாலானோர் அறிந்த 'மஸ்ஸாயி' கலாசாரம் உல்லாசப் பயணத்துறையினரைப் பெரிதும் கவர்ந்துள்ளது. இவர்கள் மிக நேர்த்தியான ஆடை, ஆபரணங்களை அணிகின்றனர்.

## காலநிலை

இங்கு பிரதேசத்திற்குப் பிரதேசம் மாறுபட்ட காலநிலை நிலவுகின்றது. வருடத்தில் பெரும்பாலும் வெப்பமான காலநிலை காணப்படும். மார்ச் முதல் மே வரையும் பின்னர் ஒக்டோபர் முதல் டிசம்பர் வரையும் அதிக மழைவீழ்ச்சி காணப்படும்.

## தொடர்பாடல்

**தொலைபேசிகள்** (2006): **பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள்**-293,400; **செல்லிடத் தொலைபேசிப் பாவனையாளர்கள்:** 6,485 மில்லியன். **வானொலி நிலையங்கள்** (2002): AM 24, FM 18, SW 6. **தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள்** (2002): 8. **இணையத்தள வழங்குனர்கள்** (2007): 2120. **இணையத்தளப் பாவனையாளர்கள்:** 2.77 மில்லியன்.

## போக்குவரத்து

**புகையிரப் பாதைகளின் மொத்த நீளம்** (2006): 2778 கி.மீ.

**பெருந் தெருக்கள்** (2004): மொத்தம் 63265 கி.மீ (இதில் செப்பனிடப்பட்டவை 8933 கி.மீ; செப்பனிடப்படாதவை 54332 கி.மீ. **நீர் வழிப்பாதை:** கென்யாவின் எல்லையில் அமைந்துள்ள விக்டோரியா ஏரியின் ஒரு பகுதியில் போக்குவரத்துகள் நடைபெறுகின்றன. **துறையும் துறைமுகமும்:** கிசுமு, லெமு, மொம்பாஸா. **விமான நிலையங்கள்** (2007): 225.

## பொருளாதாரம்

**விவசாயம்** (பயிர்ச்செய்கை நிலம் 8%) **மற்றும் விலங்கு வேளாண்மை:** தேயிலை, கோப்பி, சோளம், கோதுமை, கரும்பு, பழவகைகள், மரக்கறி வகைகள், பாற்பண்ணை உற்பத்திகள், மாட்டிறைச்சி,பன்றியிறைச்சி,கோழி, முட்டைகள்.

**தொழிலாளர் சக்தி** (2003): 11.85 மில்லியன் (இதில் விவசாயம் 75%, கைத்தொழில் மற்றும் சேவைகள் 25%). **வேலையற்றோர்** (2001): 40%. **கைத்தொழில்கள்:** பிளாஸ்டிக், தளபாடங்கள், புடவை, சவர்க்காரம், சிகரெட். **இயற்கை வளங்கள்:** சுண்ணாம்பு, இரத்தினக்கற்கள், செம்பு, நீர்மின்வலு.

**ஏற்றுமதிகள்** (2007): தேயிலை, கோப்பி, பெற்றோலியப் பொருட்கள், மீன். **இறக்குமதிகள்** (2007): இயந்திரங்கள், போக்குவரத்து சாதனங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள், பெற்றோலியப் பொருட்கள். **முக்கிய வர்த்தகப் பங்காளிகள்** (2004): உகண்டா, ஐக்கிய ராச்சியம், ஐக்கிய அமெரிக்கா, நெதர்லாந்து, எகிப்து, தன்சானியா, பாகிஸ்தான், ஐக்கிய அரபு ராச்சியம், சவுதி அரேபியா, தென் ஆபிரிக்கா, இந்தியா, சீனா,ஜப்பான்.

## பிரசித்தி பெற்ற இடங்கள் சில...

✸ அம்போசெலி தேசிய சரணாலயம் ✸ டுர்கானா ஏரி ✸ ஹெலர் பூங்கா ✸ தேசிய நூதனசாலை - நைரோபி ✸ நைரோபி தேசிய பூங்கா ✸ ஷிமோனி மற்றும் வாசினி தீவு ✸ ஃபோர்ட் ஜீசஸ் ✸ ஸாவோ வெஸ்ட் தேசிய பூங்கா.

கென்யா மலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திமிங்கிலம் பற்றிய சில அபூர்வ தகவல்கள்

பிராணிகளின் பரிணாமத் தோற்றத்திற்குக் கடல் ஒரு முக்கிய இருப்பிடமாகும். துளை உடலிகளில் இருந்து பாலூட்டிகள் வரை அனைத்து வகைப் பிராணிகளும் கடலில் காணப்படுகின்றன. அந்தவகையில், திமிங்கிலங்கள் கடலில் பெருமளவில் வாழ்வதுடன் உலகில் மிகப்பெரிய நீர்வாழ் பாலூட்டி இனமும் இதுவாகும். முழு வளர்ச்சியடைந்த திமிங்கிலம் சுமார் 30 மீற்றர் நீளமுடையதாகவும் அதன் வால் 6 மீற்றர் அகலம் கொண்டதாகவும் இருக்கும். திமிங்கிலத்தின் நிறை 125 தொன்னும் இதில் தசையின் நிறை 50 தொன்னும். பின் நிறை 20 தொன்னுமாக இருக்கும். திமிங்கிலத்தின் நாக்கு மாத்திரம் $2^{1/2}$ தொன் நிறை கெண்டதாகும்.





## பாலூட்டிகளுக்குரிய குணாதிசயங்கள்

திமிங்கிலம் நீர் வாழ்க்கையைக் கொண்டுள்ளதால் நீண்ட படகு போன்ற உடலை அது கொண்டுள்ளது. இதன் இணையுறுப்புகள் மீன்களில் உள்ளது போன்று துடுப்புகளாக மாறிச் செயல்படுகின்றன. இடுப்புத் துடுப்புகள் மறைந்துவிட்டன. வால் துடுப்பின் உதவியினால் நீரில் மேலும் கீழும் மூழ்குகின்றது. இத்தகைய அமைப்பை திமிங்கிலம் கொண்டுள்ளதால், இது பாலூட்டிகளில் இருந்து வேறுபட்டுக் காணப்படுகின்றது. எனினும், உடலின் உட்புறத்தில் பாலூட்டிகளுக்குரிய குணாதிசயங்கள் பல காணப்படுகின்றன. இவை எப்பொழுதும் கூட்டமாக நீந்தும். ஆபத்துக்கள் ஏற்படும்போது, அநேக திமிங்கிலங்கள் கூட்டாகச் சேர்ந்து எதிரிகளைத் தாக்கும்.

## திமிங்கிலத்தின் கண்கள்

திமிங்கிலத்தின் கண்கள் சிறியதாகவும் அது நீரில் மூழ்கியிருக்கும்போது பார்ப்பதற்கு ஏற்பவும் அமைந்துள்ளன. விழி வெண்படலம் (Cornea) தட்டையாகவும் லென்ஸ் வட்டமாகவும் உள்ளன.கண்களில் விசேட உறைகளும் தசைகளும் உள்ளன. மேலும் கண்ணீர்ச் சுரப்பிகளுக்குப் பதிலாக, 'கார்டேரியன்' சுரப்பிகள் கொழுப்பு நீரைச் சுரக்கின்றன.

## திமிங்கிலத்தின் உடல் அமைப்பு

திமிங்கிலத்திற்கு பொதுவாகப் பற்கள் காணப்பட்டபோதிலும், சில வகைத் திமிங்கிலங்களில் அவை காணப்படுவதில்லை. அவற்றுக்குப் பதிலாக அப்பகுதியில் தகடுகள் போன்ற எலும்புப் பகுதிகள் உள்ளன. இவை மீன்களைப் போல் நீர்வாழ் உயிரினமாக இருந்தபோதிலும் நீர்ச்சுவாச உறுப்புகளைப் பெறாது, பாலூட்டிகளைப் போல் நிலச்சுவாச உறுப்புகளாகிய நுரையீரல்களையே கொண்டுள்ளன.

வெளிநாசித்துளைகளைச் சுற்றி வெளிப்புறத்தில் ஒரு பொதுத்துளை காணப்படுகின்றது. அத்துளையைத் தசையாலான வால்வு கட்டுப்படுத்துகின்றது. இது நீரில் மூழ்கியிருக்கும்போது நீர், சுவாச உறுப்பினுள் செல்லாது தடுக்கிறது. நுரையீரல்கள் பெரியதாகவும் சுருங்கிவிரியும் தன்மை உடையதாகவும் காணப்படுகின்றன. இவை அதிக காற்றைச் சேமித்து வைக்க உதவுகின்றன.

வெளித்துளையின் வழியாகக் காற்றை உடலில் இருந்து வேகமாக வெளியேற்றுகின்றது. அப்பொழுது நீண்ட தூரம் கேட்கும் அளவிற்கு உரத்த சத்தத்தை எழுப்புகிறது. பின்னர் காற்றை வெளிநாசித் துளைகளின் வழியாக உள்ளே இழுத்து நுரையீரல்களில் சேர்த்து வைத்த பின்னர், மறுபடியும் நீரினுள் மூழ்கி விடுகின்றது. நீரில் மூழ்கி இருக்கும்போது, சுவாசம் மெதுவாக நடைபெறுவதால் 5-10 நிமிடங்களுக்கு ஒருமுறை சுவாசிக்கத் திமிங்கிலங்கள் நீர் மட்டத்திற்கு மேல் வருகின்றன.

மேலும், இரத்தக் குழாய்களினாலான ரீட்டியா மிராபிலியா (Retia Mirabilia) என்ற பகுதி அதிக ஒட்சிசனை சேர்த்து வைத்து தேவையான சந்தர்ப்பங்களில் பயன்படுத்த உதவுகின்றது. நீரில் மூழ்கி இருக்கும்போது இருதயத் துடிப்பு மிகவும் மெதுவாக நடைபெறுகிறது. இவை வெப்ப இரத்தப் பிராணிகளாகும். இருப்பினும், சுற்றுப்புறத்திலுள்ள நீரின் சூழ்நிலைக்கு ஏற்ப உடலின் வெப்பநிலையை மாற்றிக்கொள்ளும் தன்மையுடையவை. தோலிற்கும் தசைக்கும் இடையில் கொழுப்புப் பொருளாலான பிளப்பர் (Blubber) என்ற பகுதி நீரில் ஏற்படும் வெப்ப இழப்பை ஈடுகட்டுகிறது.



## பாலூட்டி வகைப் பிராணி

இனப்பெருக்க முறை பாலூட்டிகளைப் போன்றது. இவை குட்டி போட்டுப் பால் கொடுப்பவை. இவை குட்டிகளை நீரின் அடியிலேயே ஈனுகின்றன. இதன் மூளை மற்ற உயிரினங்களை விடப் பெரிதாகவும் இதன் நிறை 7000 கிராமாகவும் உள்ளது. கபால எலும்பு வட்டமாகவும் சிறிதாகவும் உள்ளது. முதுகெலும்பு முட்களும் தசைகளும் பாலூட்டிகளில் உள்ளது போன்று அமைந்துள்ளது.

## இருவகைத் திமிங்கிலங்கள்

திமிங்கிலங்கள் இரண்டு வகைப்படும். அவை பற்கள் உள்ள திமிங்கிலங்கள் (Toothed Whales) வேல்போன் திமிங்கிலங்கள் (Whalebone Whales) என்பனவாகும். இவை அநேக மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு நிலத்தில் வாழ்ந்த ராட்சதப் பல்லிகளிலிருந்து தோன்றிப் பின்னர் நீர்த் தகவமைப்பைப் பெற்றன என விஞ்ஞானிகள் கருதுகின்றனர். எனவே, திமிங்கிலங்கள் உண்மையில் மீன்களல்ல. அவை மனிதனைப் போல பாலூட்டிகளே எனக் கருதலாம்.





## பலவகைத் திமிங்கிலங்கள்

திமிங்கிலங்களில் பல இனங்கள் உண்டு. அவற்றில் பலீன் திமிங்கிலம் (Baleen whale), ஹம்பேக் திமிங்கிலம் (Humpback whale), பௌஹெட் திமிங்கிலம் (Bowhead whale), நீலத் திமிங்கிலங்கள் (Blue whales) ரைட் திமிங்கிலங்கள், ஃபின் திமிங்கிலங்கள், மின்க் திமிங்கிலங்கள், பொட்டில் நோஸ் திமிங்கிலங்கள் (Bottle nose whale), ஸ்பெர்ம் திமிங்கிலங்கள் உள்ளிட்ட பல்வேறு வகையான திமிங்கிலங்கள் உள்ளன.

## துருவப் பகுதி திமிங்கிலங்கள்

துருவப் பகுதிகளில் நீலத்திமிங்கிலங்கள், ஹம்பேக், ரைட், ஃபின், மின்க், பொட்டில்நோஸ், ஸ்பெர்ம் போன்ற திமிங்கிலங்கள் முக்கியமானவை. பெப்ரவரி மாதத்தில் திமிங்கிலங்களின் எண்ணிக்கை மிக அதிகமாக இருக்கும். குளிர் அதிகமாக இருக்கும் ஜூலை, ஓகஸ்ட் மாதங்களில் திமிங்கிலங்கள் இடம்பெயர்ந்து சென்று விடுகின்றன. பொதுவாக ஆறு மாதங்கள் துருவக் கடல் பகுதிகளில் காணப்படும் திமிங்கிலங்கள் அடுத்த ஆறு மாதங்களுக்கு மித வெப்பக்கடல் பகுதிகளை நாடிச் சென்று விடுகின்றன. அந்தப் பகுதிகளுக்குச் சென்ற பின் திமிங்கிலங்கள் அவ்வளவாக வேட்டையாடுவதில்லை. தமது உணவையே குறைத்துக்கொள்கின்றன. முன்னைய ஆறு மாதங்கள் உண்ட உணவே அடுத்த ஆறு மாதங்களுக்கான ஆற்றலைக் கொடுக்கிறது.

## நீலத் திமிங்கிலங்கள்

நீலத் திமிங்கிலங்கள் (Blue Whales) 150 மெட்ரிக் தொன் நிறையுடையவை. இவை ஒரு நாளைக்கு அதிகபட்சம் மூன்று தொன் அளவு வரையான இரைகளை உட்கொள்கின்றன.

நீலத் திமிங்கிலத்தின் குட்டி பிறக்கும்போதே 25 அடி நீளமாக இருக்கும்.அதன் நிறையோ இரண்டு தொன்கள் வரை இருக்கும். ஒரு நாளைக்கு தாயிடமிருந்து சத்து நிறைந்த 600 லீற்றர் பாலைக் குடித்து வளர்கிறது. இவ்வாறு பாலைக் குடிப்பதால் ஒரே வாரத்தில் இரண்டு மடங்கு நிறை கூடிவிடுகிறது. ஏழு மாதங்களில் சுமார் 25 தொன் நிறை கொண்ட பெரியதொரு விலங்காக இந்த நீலத் திமிங்கிலம் மாறிவிடுகிறது.

**-இரஞ்சித் ஜெயகர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் II (கடந்த வாரத் தொடர்ச்சி...)

சுட்டெண்: .............................. நேரம்: 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

21. இலங்கையில் காணப்படும் மிகப் பெரிய மலை எது?
   (1) நக்கில்ஸ் மலை (2) நமுனகுலகந்த மலை
   (3) சிவனொளிபாத மலை (4) பீதுருதாலகால மலை

22. ஊவா மாகாணத்தின் தலைநகரம் எது?
   (1) காலி (2) இரத்தினபுரி (3) பதுளை (4) கண்டி

23. குருநாகல், புத்தளம் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய மாகாணம் எது?
   (1) மேல் மாகாணம் (2) வட மாகாணம்
   (3) வடமத்திய மாகாணம் (4) வடமேல் மாகாணம்

24. 'களனி கங்கை' கடலுடன் கலக்கும் இடம் எது?
   (1) திருகோணமலை (2) கொழும்பு
   (3) அம்பாந்தோட்டை (4) களுத்துறை

25. மின்னேரியாக் குளத்தைக் கட்டிய மன்னன் யார்?
   (1) பண்டுகாபயன் (2) தேவநம்பியதீசன்
   (3) பராக்கிரமபாகு (4) மகாசேனன்


26. 'படகமுவ வனம்' எங்கு அமைந்துள்ளது?
   (1) இரத்தினபுரி (2) குருநாகல் (3) அம்பாறை (4) மொனராகலை

27. நுளம்பினால் பரவும் நோய் அல்லாதது?
   (1) டெங்கு (2) வாந்திபேதி (3) மலேரியா (4) சிக்குன்குன்யா

28. பாடசாலையில் நிகழும் விழா ஒன்றின்போது முதலில் நிகழ்வது எது?
   (1) பாடசாலைக் கொடியேற்றுதல் (2) தமிழ்மொழி வாழ்த்துப் பாடுதல்
   (3) தேசிய கொடியேற்றுதல் (4) தேசிய கீதம் இசைத்தல்

29. நீல நிறச்சாயத்தையும் மஞ்சள் நிறச்சாயத்தையும் கலக்கும்போது தோன்றும் நிறம் யாது?
   (1) பச்சை (2) சிவப்பு (3) ஊதா (4) கபிலம்


30. A, B, C, D ஆகிய பாத்திரங்களில் ஒரே அளவான கறி உப்பை இடும்போது எப்பாத்திரத்திலுள்ள கறி உப்பு விரைவாகக் கரையும்?




31. நீலத்தூளை நீரில் கரைத்து அதனை சில நாட்கள் அசையாது ஓரிடத்தில் வைத்தபோது, அவதானிக்கக்கூடியது எது?
   (1) நீரின் நீலநிறம் படிப்படியாக அதிகரிக்கும்
   (2) நீரின் மேற்பரப்பில் நீலத்தூள் மிதக்கும்
   (3) கரைசலின் நீலநிறம் மாறாதிருக்கும்
   (4) நீரின் அடியில் நீலத்தூள் படியும்

32. அசுத்த நீரைப் பருகுவதால் ஏற்படக்கூடிய நோய் அல்லாதது?
   (1) மஞ்சட்காமாலை (2) நெருப்புக் காய்ச்சல்
   (3) நீர்வெறுப்பு நோய் (4) கொலரா

33. நீரைக் கொண்டுள்ள கண்ணாடிக் குவளையில் சிறிதளவு தேங்காயெண்ணெய், மண்ணெண்ணெய் என்பன இட்டு சிறிது நேரத்தின்பின் அவதானிக்கக்கூடிய உரு எது?




34. மயக்கமுற்ற நோயாளிக்கு மிகப் பொருத்தமான முதலுதவியாக அமைவது?
   (1) ஆடைகளைத் தளர்த்தி காற்றுப்பட விசிறுதல்.
   (2) சிறிதளவு நீரைத் தெளித்தலும் அருந்துவதற்குக் கொடுத்தலும்.
   (3) தலையை நன்கு கீழ்நோக்கித் திருப்பிக் காற்றுப்படச் செய்தல்.
   (4) தலையை நிமிர்ந்திருக்குமாறு அமரச் செய்து காற்றுப்பட விசிறுதல்.

35. தேசப்படங்களில் பாலத்தைக் காட்டுவதற்குப் பயன்படும் நிறம் எது?
   (1) சிவப்பு (2) கறுப்பு (3) நீலம் (4) கபிலம்

36. 
இக்குறியீடு குறிப்பது;
   (1) கவனமாகக் கையாளுங்கள்
   (2) மின்தாக்குதல் ஏற்பட இடமுண்டு
   (3) இப்பக்கம் மேலே
   (4) நொருங்கக் கூடியது




37. ஓட்டவீரர் ஓடி முடித்தவுடன் செய்ய வேண்டியது;
   (1) எளிய பயிற்சியில் ஈடுபடுதல் (2) உடலை நீரினால் நனைத்தல்
   (3) குளிர்பானத்தைப் பருகுதல்
   (4) சிறிது நேரத்திற்கு நிலத்தில் கால்களை நீட்டியிருத்தல்

38. | 2 , 8, 9 , 7 | இவ்விலக்கங்கள் நான்கையும் பயன்படுத்தி ஆக்கத்தக்க மிகச்சிறிய எண் யாது? ..............................

39. 9346 இல் நூறினிடத்து இலக்கத்தின் பெறுமானம் யாது? ..............................

40. 7342 ஐ எண் பெயரில் எழுதுக. ..............................

41. 6348 உடன் 465 ஐ கூட்டுக. கூட்டுத்தொகை யாது? ..............................

42. 3902 இலிருந்து 450 ஐக் கழிக்க. வித்தியாசம் யாது? ..............................


43. ஒரு கூடையில் 98 தேங்காய்கள் உள்ளன. அவ்வாறான 6 கூடைகளில் உள்ள தேங்காய்களின் எண்ணிக்கை யாது? ..............................

44. 648 தோடம்பழங்கள் ஆறு பெட்டிகளில் சமமாக அடுக்கப்பட்டன. ஒரு பெட்டியில் உள்ள தோடம்பழங்களின் எண்ணிக்கை யாது? ..............................

45. சில நகரங்களுக்கிடையே உள்ள தூரங்கள் பின்வரும் உருவில் கிலோமீற்றரில் தரப்பட்டுள்ளன. மாத்தறையிலிருந்து காலி, கொழும்பு ஊடாக புத்தளத்திற்கு உள்ள தூரம் யாது? ..............................

| | காலி | கொழும்பு | புத்தளம் |
|---|---|---|---|
| கொழும்பு | | | 142 |
| காலி | | 161 | 258 |
| மாத்தறை | 45 | 161 | - |


46. தரப்பட்டுள்ள அளவீடுகளுக்கேற்ப உருவின் சுற்றளவைக் காண்க.
..............................




47. மீனாவின் நிறை 23kg 750g ஆகும். குமாரின் நிறை 18kg 850g ஆகும். இருவரும் பெரிய தராசொன்றில் ஏறி நின்றால் தராசு காட்டும் நிறை யாது? ..............................

48. ரூபாய் 35.00 விலையுள்ள ஒரு வரைதல் புத்தகத்தையும் ரூபாய் 16.50 விலையுள்ள ஒரு வர்ணப் பெட்டியையும் வாங்கி நூறு ரூபாய்த் தாள் ஒன்றினைக் கொடுக்கும்போது, கிடைக்கும் மீதிப்பணம் எவ்வளவு? ..............................


49. பகுதி எண் 6, தொகுதி எண் 4 ஆகவுள்ள பின்னத்தை உருவில் நிறந்தீட்டிக் காட்டுக.



50. கூட்டுக. $\frac{2}{3}+\frac{1}{6}=$

51. 30 மாங்காய்கள் உள்ள குவியலொன்றில் 2/6 பங்கு பழுத்தவை ஆகும். பழுக்காத மாங்காய்கள் எத்தனை? ..............................

52. தரம் 05 மாணவர்கள் கொண்டுவந்த நான்கு வகையான உணவுகளைக் குறிப்பிடும் பூரணமற்ற வரைபு உருவில் காணப்படுகின்றது. இங்கு இடியப்பத்தைக் கொண்டுவந்த மாணவர்களின் எண்ணிக்கை, பாண் கொண்டுவந்த மாணவர்களினதும் பயறு கொண்டுவந்த மாணவர்களினதும் கூட்டுத்தொகைக்குச் சமம். வரைபில் உரிய நிரலில் இடியப்பத்தைக் கொண்டுவந்த மாணவர்களின் எண்ணிக்கையைக் குறித்து அந்நிரலை நிழற்றுக.




53. கீழே தரப்படும் படங்கள் ஒரு நிகழ்வினைக் காட்டுகின்றன. அவற்றினைக்கொண்டு ஆறு வாக்கியங்களுடனான ஒரு கதை எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களேனும் இடம்பெற வேண்டும். அவ்வாக்கியங்களில் எழுவாய், பயனிலை தொடர்பு சரியாக இருக்க வேண்டும்)



..............................
..............................
..............................
..............................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்**

# கண்டி அரசின் வீழ்ச்சிக்கும் ஆங்கிலேய ஆட்சியின் ஆரம்பத்திற்கும் வித்திட்ட

# எஹலபொல மகாதிகாரம்






கண்டி நகரின் அண்மைக்கால தோற்றம்



1800 இல் கண்டி நகர்



கண்டி உடன்படிக்கையில் கைச்சாத்திட்டவர்கள்

**தென்னிந்திய நாயக்கர் ஆட்சியிலிருந்து இலங்கையை விடுவிக்கப் போராடிய வீரராகவே 'எஹலபொல மகாதிகாரம்' இனங்காணப்படுகின்றார். எனினும், சிலர் 'ஆங்கிலேயரிடம் நாட்டைத் தாரை வார்த்தவர்' என்றும் இவரைக் குறிப்பிடுகின்றனர். உண்மையில் கண்டியரசின் நாயக்கர் ஆட்சிக்கான அஸ்தமனமும் அவர்தான்; ஆங்கில ஆட்சியின் ஆரம்பமும் அவர்தான்.**

## ஆரம்ப காலம்

1773 ஆம் ஆண்டு மாத்தளை வடக்குப் பகுதியிலுள்ள உடுகொட சியபத்துவ எனும் இடத்திலேயே இவர் பிறந்தார். இவரது முழுப்பெயர் 'எஹலபொல செனவிரட்ண சேனாநாயக்க சந்திரதிலக விஜேசுந்தர திசாநாயக்க அமரக்கோன் வாசல பண்டார முதியன்ஸே' என்பதாகும். எனினும், பின்னாளில் 'எஹலபொல' எனும் பெயராலேயே இவர் பிரசித்தி பெற்றிருந்தார்.

யடவத்த, கொப்பேகடுவ ஆகிய பிக்குகளிடம் சிங்கள மொழியையும் பௌத்த மதத்தையும் பயின்றார். இவரது தந்தை ஊவா திசாபதியாகப் பதவி வகித்தவர். அவரது வழியில் மகன் பல்வேறு பதவிகளையும் வகித்துள்ளார். அவற்றில் அரசவை பொறுப்பாளர், திறைசேரி பொறுப்பாளர், நீதித்துறைப் பொறுப்பாளர் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. தொடர்ந்து, 1803 ஆம் ஆண்டு ஏழு கோரளை திசாபதி பதவியும் 1808 இல் மீகஸ்தென்ன அதிகாரத்தின் இறப்புக்குப் பின்னர் உடுகம்பஹேயின் அதிகாரம் பதவியும் வழங்கப் பட்டது.

## மகாதிகாரமாக பதவி வகித்தல்

1812 இல் தனது மாமனாரான பிலிமதலாவவின் இறப்புக்குப் பின்னர் மகாதிகாரம் பதவியைப் பெற்றார். இவர் பிலிமதலாவ மகாதிகாரத்தின் மருமகன் என்பதால், மாளிகையைத் தவிர வேறு இடங்களில் அரச அடையாள ஆடையை அணிந்து செல்ல அரசரால் இவருக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இவருக்கு சப்ரகமுவ திசாபதி பதவியையும் அரசன் வழங்கியிருந்தான். அதற்கு வசதியாக எஹலபொல கண்டியில் குடியேறினார். இதன்போது, தனக்குப் பதவி வழங்கிய அரசனுக்கு மாணிக்கக்கல் பொருத்திய மகுடத்தையும் வாளொன்றையும் எஹலபொல பரிசளித்தார். இது சப்ரகமுவ பிரதேசத்தின் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான அவரது முயற்சிகளில் ஒன்றென சிலர் அரசனைத் தூண்டிவிட்டனர்.

## அரசனுக்கெதிரான கிளர்ச்சி

தனது மாமனாரைப் போன்றே எஹலபொலவும் நாயக்கர் வம்ச அரசர்களின் ஆட்சியை விரும்பவில்லை. அதனால், ஆங்கிலேயருடன் ரகசியத் தொடர்புகொண்டிருந்தார். இவர் அரசனுக்கெதிராக சதி செய்தபோதும், அரசன் அவரை ஒரேயடியாகத் தண்டிக்கவில்லை. ஆனால், எஹலபொல மீது பொறாமை கொண்டிருந்த மொல்லிகொடதான் அரசனைத் தூண்டிவிட்டான். தனக்கு முன்னால் உடனே ஆஜராகுமாறு அரசன் ஆணையிட்டபோது, அதன் ஆபத்தை உணர்ந்துகொண்ட எஹலபொல ஆஜராகவில்லை. மாறாக, ஆங்கிலேயருக்கு ஆதரவாகச் செயற்பட்டு, அரசனுக்கு எதிராக கிளர்ச்சி செய்தார்.

இதனால், அரசன் அவரை பதவி நீக்கம் செய்து, மகாதிகாரமாக மொல்லிகொடவை நியமித்தார்.

இதனால், 1814 மே மாதம் தன்னோடு சிலரை அழைத்துக் கொண்டு எஹலபொல கொழும்புக்குத் தப்பிச்சென்று ஆங்கிலேயரிடம் அடைக்கலம் பெற்றார். இதனால், கோபமுற்ற அரசன் ராஜதுரோகக் குற்றத்துக்காக அக்கால சட்டப்படி எஹலபொலவின் மனைவி, மக்களை சித்திரவதை செய்து கொன்றான். இச்சம்பவம் போகம்பரையில் நிகழ்ந்தது. இதனால், கண்டிவாழ் மக்கள் அரசன் மீது வெறுப்புற்று, எஹலபொல மீது அபிமானம் கொண்டார்கள். இதைக்கண்டு ஆங்கிலேய மொழிபெயர்ப்பாளரும் ஒற்றனுமாகிய ஜோன் டொய்லி மட்டற்ற மகிழ்ச்சி கொண்டான். அவன் அரசன்மீது கண்டி மக்களை மேலும் வெறுப்புற பல்வேறு சதிகளைச் செய்தான். இதனைத் தொடர்ந்து எஹலபொலவின் பின்னால் மக்கள் அணி திரண்டனர். கண்டியரசைக் கைப்பற்றுவதற்காக ஜோன் டொய்லி எஹலபொலவிடமிருந்து பல உதவிகளைப் பெற்றான். அதற்கிணங்க அரசுரிமையைப் பெற்றுத்தருவதாகவே அவன் எஹலபொலவுக்கு வாக்குறுதி அளித்திருந்தான்.

எனினும், 1815 ஆம் ஆண்டு கண்டியரசை ஆங்கிலேயர் கைப்பற்றிய பின்னர் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையில் அந்த வாக்கு உள்ளடக்கப்படவில்லை. ஜோன் டொய்லியின் [illegible] எஹலபொல அப்போது புரிந்துகொள்ளவில்லை. ஆங்கிலேயரின் திட்டம் அவர் மூலம் கண்டி அரசைக் கைப்பற்றுவதுதான் என்பதையும் அவர் உணர்ந்து கொள்ளவில்லை.



கண்டி உடன்படிக்கை



எஹலபொலவின் உத்தியோகபூர்வ முத்திரை

## குற்றம் சுமத்தப்பட்டு சிறையில் அடைத்தல்

இதேவேளை, 1818 ஆம் ஆண்டு கெப்பிடிபொலவின் தலைமையில் கிளர்ச்சி ஒன்று நடந்தது. அதில் எஹலபொலவும் சம்பந்தப்பட்டிருந்ததாகச் சந்தேகப்பட்ட ஆங்கிலேயர், அதே ஆண்டில் மார்ச் மாதம் இரண்டாம் திகதி அவரைக் கைது செய்து, கடூழிய தண்டனைக்காக போகம்பரைச் சிறையில் அடைத்தனர். 1825 வரை தொடர்ந்து ஏழு வருடங்கள் அவரை போகம்பரைச் சிறையில் வைத்தபின்னர், இவ்வாறு இலங்கையில் விட்டுவைத்தால் மேலுமொரு கிளர்ச்சிக்கு வழியமைத்துவிடுவார் எனக்கருதி மொரீஷியஸ் தீவிலுள்ள சிறைக்கு எஹலபொலவை இடம்மாற்றினர்.

## இறுதிக்காலம்

அங்கே அவர் தனது இறுதிக் காலத்தில் மத சோதிட நூல்களை வாசித்தவாறே பொழுதைக் கழித்தார். நான்கு வருடங்களுக்குப் பின்னர் அதாவது 1829 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நான்காம் திகதி வயிற்றுப்போக்கினால் பாதிக்கப்பட்டு எஹலபொல உயிரிழந்தார். இறக்கும்போது அவருக்கு வயது 59 ஆகும்.

-(ஈ)



மொரீஷியஸ் தீவிலுள்ள எஹலபொலவின் கல்லறை



எஹலபொல, மொல்லிகொட, கபுவத்த ஆகியோருடன் ஜோன் டொய்லி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பின்னால் நடிகரின் நடிப்பாற்றல் வெளிக்காட்டப்படும் நிலையில், கணினித்திரையில் அக்காட்சி நிர்மாணிக்கப்படல்



ஹொலிவூட் நடிகை சோ செல்டானாவின் நடிப்பாற்றலுக்கமைய கணினியில் நாவி யுவதியொருவரின் கதாபாத்திரம்



# திரையுலகில்

அற்புதமான அல்லது அபூர்வமான திரைப்படம் ஒன்றைப் பார்ப்பதற்கு நம்மில் பலருக்கும் ஆர்வமிருக்கும். அத்தகைய சிறப்பம்சங்கள் பொருந்திய திரைப்படம்தான் 'அவதார்'. பல்வேறு சாதனைகளை நிலைநாட்டியதோடு, இம்முறை 'ஒஸ்கார்' விழாவிலும் மூன்று விருதுகளைப் பெற்றுக்கொண்டது. அவதார் திரைப்படத்தில் புகழ்பெற்ற நடிகர்களோ, நடிகைகளோ நடிக்கவில்லை. மாறாக, அதன் வெற்றிக்குப் பின்னால் புகழ்பெற்ற இயக்குனர் ஒருவரே இருந்தார்.

அவர்தான் ஏற்கனவே பிரமாண்டமான திரைப்படங்கள் பலவற்றை வழங்கிய ஹொலிவூட்டின் பிரபல இயக்குனர் ஜேம்ஸ் கெமரன். இவரது உள்ளத்தில் தோன்றிய அற்புத கதையை வைத்தே அவதார் திரைப்படம் உருவானது.

தற்போதளவில் இது தொழில்நுட்ப சவால்களை வெற்றிகொண்ட காலத்தால் அழியாத ஒரு திரைப்படமாகவே விளங்குகின்றது.


ஜேம்ஸ் கெமரன்



## கெமரனின் மனதில் தோன்றியவை

தற்போதளவில் உலகிலேயே அதி கூடிய நிதி முதலீடு செய்து தயாரிக்கப்பட்ட திரைப்படம் என்ற சிறப்பை அவதார் திரைப்படம் பெற்றிருக்கின்றது.

அத்துடன், இத்திரைப்படத்திற்காக கையாளப்பட்ட தொழில்நுட்ப முறைகளும் முக்கிய இடத்தை வகிக்கின்றன. இத்திரைப்படத்தின் கதை ஜேம்ஸ் கெமரனின் மனதில் தோன்றியதோ இன்று நேற்றல்ல. மாறாக, அவர் 'டைட்டானிக்' திரைப்படத்தை இயக்கும்பொழுதே (1997) இந்த எண்ணம் தோன்றியுள்ளது. தனது மனதில் தோன்றிய உருவங்களையும் கதையையும் வெள்ளித் திரையில் கொண்டுவர வேண்டும் என்பதற்காக அன்றிலிருந்தே அவர் சிந்திக்க ஆரம்பித்துள்ளார். அதற்காக பல்வேறு தொழில்நுட்ப நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களை அணுகினார். பிரபல திரைப்பட நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தினார். எனினும், அச்சந்தர்ப்பங்களில் எல்லாம் அவதார் திரைப்படத்தை இயக்குவதற்குப் போதுமான அளவு தொழில்நுட்பம் இன்னும் வளர்ச்சி பெறவில்லை என்றே அனைவரும் கூறினர். இதுபற்றி கெமரன் கூறுகையில்;

''நான் திரைப்படத்துறையில் கைதேர்ந்த தொழில்நுட்பவியலாளர்கள் பலரை அணுகினேன். அவர்களிடம் எனது விருப்பத்தைக் கூறினேன். அனைவரும் கெமரன் அவர்களே! உங்களுக்குப் பைத்தியமா? என்று ஒரு கேள்வியை மட்டுமே என்னிடம் கேட்டனர்'' என்றார்.

இதனை அடுத்து கெமரனின் எதிர்பார்ப்புக்கள் சுக்குநூறாகின. அவர் அவதார் திரைப்படத்தை தயாரிக்கும் திட்டத்தைக் கைவிட்டார். 2004 ஆம் ஆண்டு தற்செயலாக அவதார் திரைப்படக் கதையின் பிரதியை கெமரன் மீண்டும் காணும் சந்தர்ப்பம் கிடைத்தது. அதுவரை அத்திரைப்படத்தைப் பற்றி மறந்திருந்த கெமரன், 2005 ஆம் ஆண்டு மீண்டுமொருமுறை திரைப்படத் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு தமது அவதார் திரைப்படப் பிரதிகளை அனுப்பினார். அதனைப் பார்த்த டுவென்டியத் செஞ்சரி ஃபொக்ஸ் நிறுவனம் அதை திரைப்படமாகத் தயாரிக்க முன்வந்தது. அப்பொழுது தொழில்நுட்பம் முன்னரைவிட எவ்வளவோ முன்னேறி இருந்தது. அதன்படி, அவதார் திரைப்படத்திற்கான அடித்தளம் 2004 ஆம் ஆண்டு இடப்பட்டது. திரைப்படத் தயாரிப்பு 2007 ஆம் ஆண்டில் ஆரம்பமாகியது.

## கதைச் சுருக்கம்

அவதார் திரைப்படத்திற்கு உயர் தொழில்நுட்பம் தேவைப்பட்டமைக்கான காரணம் அதன் கதையாகும். பூமியில் உள்ள விநோத மனிதர்கள், உயிரினங்கள் போன்றவற்றைத் திரையில் காட்டித் திரைப்படத்தை வெற்றியடையச் செய்யும் இயக்குனர்களுக்கு மத்தியில் ஜேம்ஸ் கெரமன் புதுமையானவர்தான் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. ஏனெனில், இவர் எமக்கு காட்ட நினைத்தது ஒரு புது உலகத்தை ஆகும். அதுதான் பெண்டோரா (Pandora) எனும் கிரகமாகும். அங்கு வாழும் மக்கள் 'நாவி' இன மக்கள் ஆவர். புதுப்புது தாவரங்கள், உயிரினங்கள் என அங்குள்ள அனைத்துமே ஆச்சரியமும் புதுமையும் தான்.

விஞ்ஞானத்தில் மேலும் வளர்ச்சியடைய விளையும் மனிதர்கள் அதற்காக பெண்டோரா கிரகத்தில் இருக்கும் 'அன் ஒப்டேனியம்' எனும் விலையுயர்ந்த கனியவளம் ஒன்றைத் தேடி எடுக்க முயற்சிக்கிறார்கள். எனினும், அந்தத் தேடல் அங்குள்ள இயற்கையையும் அதன் அமைதியையும் கெடுப்பதால், நாவி மக்கள் இந்த நடவடிக்கையை எதிர்க்கின்றனர். நாவிகளினதும் மனித இனத்தினதும் D.N.A யைக் கலப்பதனூடாக 'அவதார்' இனம் உருவாகின்றது. அவதார் உடல்களுக்குள் மனித மனதுக்கு ஊடுருவமுடியும். புதிய தொழில்நுட்பத்தின் மூலமே இது சாத்தியப்படுகின்றது. இவ்வாறான உதவியுடன் அந்த மக்களுடன் இணையும் ஒரு ராணுவ வீரன் நாவி மக்களை எதிர்த்துப் போராடுவதுதான் இத்திரைப்படத்தின் கதை.

ஒளிரும் தாவரங்கள், மனித வாகனமாக பறவைகள், தகவல்களைச் சேகரிப்பனவாகவும் நோய் தீர்க்கும் இயல்புடையனவாகவும் திகழும் பிரமாண்டமான மரங்கள், அபாய விலங்குகள், இவற்றுடன் பின்னிப்பிணைந்து வாழ்க்கையை நடத்தும் மக்கள் என கதை நீள்கிறது. திரைப்படத்தின் காட்சிகள் இத்தகைய ஒரு கதைக்கு நிச்சயம் உயர் தொழில்நுட்பம் தேவை என்பதை உணர்த்துகின்றன. அத்தோடு, நவீன ரக பாரிய ஆயுதங்கள், இயந்திரங்கள், போர்க் காட்சிகள் என அனைத்திலும் புதுமை மிளிர்கிறது. இவையனைத்தும் மிக நேர்த்தியாகவும் சிறப்பாகவும் அமைந்துள்ளது என்பதை இப்படத்தின் வசூல் சாதனை பறைசாற்றுகின்றது.

## சவால்கள்

அவதார் திரைப்படத்தின் கதாபாத்திர வடிவமைப்பு, கதையில் வரும் மிருகங்கள் மற்றும் தாவரங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கெமரன் டிஜிடல் கெமராவை இயக்குதல்



# சாதனை புரிந்த 'அவதார்'



மட்டுமல்லாமல் 'நாவி' இன மக்களும்கூட" இது கதையல்ல; நிஜம் என்று எண்ணத் தூண்டும் அளவுக்கு சிறப்பாக வெளிப் படுத்தப்பட்டுள்ளன. கதாபாத்திரங்களின் சிறிய முக பாவனைகள்கூட தத்ரூபமாக அமைய வேண்டும் என்பதற்காக கணினி தொழில்நுட்பக் குழுவினர் கடுமையாக உழைத்துள்ளனர். பொதுவாகத் திரைப்படப் பிடிப்பின்போது உண்மை நடிகர்களை வைத்து சலனப்படப்பிடிப்பு (Motion Capture) நடத்தப்படும். ஆனால், அவதார் திரைப்படத்தில் காட்சிப்பிடிப்பு (Performance Capture) முறையினையே பயன் படுத்தியுள்ளனர். இந்த முறையில் உடலின் அநேகமான பாகங்களில் தேவைகளுக் கேற்ப கெமராக்களையும் அசைவு உணரிகளையும் பொருத்தி, உடலின் சிறு அசைவுகளைக்கூட பதிவு செய்து, அந்த அசைவுகளை கணினியில் வடிவமைத்திருக்கும் உருவங்களுக்கு வழங்க முடியும்.

இதன்படி, நீங்கள் கையை அசைத்தால், கணினியிலுள்ள அந்த செயற்கை உருவமும் கையை அசைக்கும்; சிரித்தால் அதுவும் சிரிக்கும். அத்துடன், இத்திரைப்படத்தில் இன்னும் ஒருபடி மேல் சென்று முகச்சுருக்கங்கள், இமை அசைவுகள் என அனைத்துமே பதிவாக்கப்பட்டுள்ளன. அத்தோடு, 12-HD கெமராக்கள் மூலம் நடிக, நடிகையர்களின் நகர்வுகள் பல்வேறு கோணங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. தவிர, திரைப்படத்தில் வரும் கற்பனை மிருகங்கள், வாகனங்களின் அசைவுகள், ஒலிகள்கூட அவற்றை ஓரளவு ஒத்த உண்மை மிருகங்களையும் வாகனங்களையும் கொண்டு பதிவு செய்யப்பட்டுள்ளன.

(அ)

ஜேக்கின் கதாபாத்திரத்தில் நடிக்கும் சேம் வொரின்டனின் நடிப்பாற்றலுக்கமைய கணினியில் உருவாக்கப்பட்டிருக்கும் காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மையே உயர்த்தும்

உலகில் உண்மையைத் தவிர, உயர்வான பண்பு வேறெதுவாகவும் இருக்க முடியாது. உண்மை பேசி உயர்ந்தவர்களின் சரித்திரங்கள் எத்தனையோ உண்டு. அவற்றில் 'அரிச்சந்திரன் கதை', 'காந்தியின் கதை', 'ஒரு பிள்ளை இரு தாய்மாரின் கதை' என்பன இன்றும் நம் மனதில் பசுமரத்தாணிபோல் பதிந்துள்ளன என்றே கூறவேண்டும். 'தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை' என்பது போல் நாம் சிறுவயது முதலே உண்மை பேசிப் பழகவேண்டும் என்பதை ஒவ்வொருவரும் உணரவேண்டும்.



பொய் பேசுவதானது எத்தனையோ ஆபத்துக்களையும் தீய விளைவுகளையும் ஏற்படுத்தும். நாம் ஒரு பொய் சொல்வதானது அப்பொய்யை மறைக்க இன்னும் பல பொய்களை சொல்லத் தூண்டி எம் வாழ்க்கைப் பாதையை அது மாற்றிவிடக்கூடும். பொய் பேசுவது இறைவனுக்கே செய்யும் பாவமாகும். எல்லா மதங்களும் உண்மையே பேச வேண்டும் என்பதையே வலியுறுத்துகின்றன.

அயோத்தியை ஆண்ட தசரத மன்னனின் மகன் இராமன். 'தந்தை சொல்மிக்க மந்திரமில்லை' என தந்தைக்கு உண்மையுள்ளவனாக சிற்றன்னை கைகேயியின் சொல் கேட்டு உண்மை வழி தவறாது வாழ்ந்தான் என ராமாயணம் கூறுகிறது. அதுபோன்றே அரிச்சந்திரன் விசுவாமித்திரரின் சூழ்ச்சியால் நாடு நகர்களை இழந்தான். மனைவி சந்திரமதியைப் பிரிந்தான். அன்பு மகன் தேவதாசனைப் பிரிந்தான். அரசனாக இருந்தவன் இறுதியில் சுடலைக் காப்பாளருக்கு அடிமையாகி ஊழியம் புரிந்தான். இவ்விதமாக தமக்கு என்ன நேர்ந்தபோதும் உண்மை பேசுவதை ஒரு விரதமாகப் பாதுகாத்தான். முடிவில் அரிச்சந்திரன் தன் ராச்சியத்தைப் பெற்று மனைவி மக்களுடன் சுகமாக வாழ்ந்தான். இதுவே நம் வாழ்விற்கு சிறந்த உதாரணமாகும். எனவே, 'உண்மையின்றி மண்ணில் உயர்வில்லை' என்பதை உணர்ந்து நல்லவர்களாக வாழ்வோம்!




பாத்திமா றிஸ்வானா ரவூஃப், கே/மாவ கொடேகொட மு.வித்., ஹெம்மாதகம.

# குழந்தை

சின்ன முல்லை மொட்டு
சிறகு முளையாச் சிட்டு
கன்னம் தங்கத் தட்டு
கரிய புருவக் கட்டு!

மின்னல் கண்ணின் வெட்டு
மேனி காஞ்சிப் பாட்டு
பின்னும் காலின் எட்டு
பேச்சு தேனின் சொட்டு!

துன்ப இருளைத் தொட்டு
துடைத்து எறிந்து விட்டு
இன்பம் விளையும் மட்டும்
இசைக்கும் மழலை மெட்டு!

அன்னை மனத்தைப் பித்து
ஆக்கப் பிறந்த முத்து
நன்னம்பிக்கை வித்து
நாட்டின் உயர்ந்த சொத்து!

# விடாமுயற்சியே வெற்றிக்கு வழி!



'மனிதன் விழாமல் வாழ்ந்தான் என்பது பெரிதல்ல; விழுந்தபோதெல்லாம் எழுந்தான் என்பதே பெரிது''

சராசரி மனிதன் பாதையில் செல்லும்போது தட்டுத்தடுமாறி, விழுந்தானேயானால்... அவன் அவ்வாறு அந்த நிலையில் இருக்க விரும்புவதில்லை. மாறாகத் தன்னைச் சுதாகரித்தவனாக எழுந்து நிற்பான். அதுபோலவே, மனித வாழ்க்கையில் ஏற்படும் தோல்விகள், இடையூறுகள் என்பனவற்றைக் கண்டு திகைத்து நிற்காமல் அடுத்த கட்டத்திற்குத் தன்னைத் தயார்படுத்தவேண்டும். இதுவே வெற்றியாளனின் பண்பாகும்.

முயற்சி செய்யும் தடவையெல்லாம் வெற்றி கிடைக்கும் என்று பலரும் நினைத்துக்கொள்கிறார்கள்! இவ்வாறு நினைத்திருந்தால்... அமெரிக்காவின் சிறந்த ஆட்சியாளர்களில் ஒருவரான ஆப்ரஹாம் லிங்கனைப் பெற்றிருக்கமுடியாது. முதல் தடவை தோல்வி கண்டதற்காக, எடிசன் முயற்சியை மூட்டை கட்டி வைத்திருந்தால்... மின்குமிழை இந்த உலகம் பெற்றிருக்காது. ஆப்ரஹாம் லிங்கன் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட எண்ணிக்கைகளும் அதன் தோல்விகளும் அவர் சந்தித்த துன்பங்களும் ஏராளம் ஏராளம். அந்த வகையில் வல்லரசையே அதிர வைத்த, அடிமைத் தனத்தை இல்லாமல் செய்ய அவர் பட்டபாடுகள் ஏராளம்.

ரோஜாவைப் பறிக்க நினைத்தால்.... முள்ளைத் தொட்டுத்தான் ஆகவேண்டும்! முத்தைப் பற்ற நினைத்தால்... அலைகளோடு போராடத்தான் வேண்டும். இடையூறுகள் இன்றி வெற்றி இல்லை! தோல்விகளெல்லாம் வெற்றியை அழிப்பதில்லை. வெற்றிக்கான முதற்படிகள் தோல்விகள். அவை தாண்டப்படும்போது வெற்றிகள் நம்மைத் தேடிவரும்.

பாயிகா அபூபக்கர், பேருவளை.



# மூலதனம்

மூளை நமக்கு மூலதனம் - நீ
முடியாது என்பது மூடத்தனம்

மூச்சே நமக்குச் சீதனம் - அதுபோல்
முயற்சியே நமக்கு உயர்வு தரும்.

நாளை நீ ஆளணும் - நீ
நல்லதைச் சொன்னால் கேட்கணும்!

நாடு போற்றவே வாழணும் - நல்லதையே
நாடணும், நன்னடத்தையே தோழன்
ஆகணும்!

பாளை விட்ட தென்னை - நாளை
தாகம் தீர்த்திடும் உனக்கும்

பாளை போலவே நன்மையே புரிந்து
பண்பாய் வாழணும் உண்மையே!


# கோபத்தை அடக்கிக் கொள்வோம்



நாம் ஒருவரைப் பார்த்துக் 'கோபப்படாதே' என்று கூறுவதைவிட 'கோபத்தை அடக்கிக் கொள்'என்று கூறுவதுதான் பொருத்தமானது. ஏனெனில், கோபம் என்பது மனிதனுடன் ஒட்டிப் பிறந்த ஒரு குணமாகும். உலகில் கோபம் வராதவர்களே இருக்கமாட்டார்கள். ஆனால், கோபத்தை அடக்கிக் கொள்ளும் உத்தமர்களும் இருக்கவே செய்கின்றனர். கோபம் என்பது எமது பலமல்ல. அது எமது பலவீனமேயாகும். கோபம் வரும்போது எது நல்லது? எது கெட்டது? என்பதை நாம் பிரித்தறிய முடியாத நிலை ஏற்படுகிறது. கோபம் தணிந்த பிறகே நாம் செய்த தவறுகளை நினைத்துக் கவலைப்படுகிறோம். எமக்குக் கோபம் வரும்போது நாம் எந்த நிலையில் இருக்கின்றோமோ, அந்த நிலையில் இருந்து உடனே மாறிவிடவேண்டும். உதாரணமாக நாம் நின்று கொண்டிருந்தால் உடன் உட்கார்ந்துவிடவேண்டும். எதிரியை வெட்டி வீழ்த்துபவன் வீரனல்ல; மாறாகத் தனது கோபத்தை அடக்கிக் கொள்பவனே உண்மையான வீரனாவான். எனவே, கோபத்தைப் புறந்தள்ளிப் பிறருக்கு மன்னிப்பளித்து வாழப் பழகிக் கொள்வோமாக.

எம்.என்.சுமையா, தரம் - $6^{D}$, களு/அல்-ஹம்றா ம.வித்., தர்கா நகர்.

# பொறுமைக்கு ஒரு பாடம்



புத்தர் ஒருமுறைதான் பருகுவதற்காக அருகில் உள்ள குளத்திலிருந்து தண்ணீர் எடுத்து வருமாறு தனது சீடர் ஒருவரிடம் கூறினார். சீடர் குளத்துக்குச் சென்றபோது, யானை ஒன்று அந்தக் குளத்தைக் கலக்கிவிட்டுச் சென்றிருந்தது.

தண்ணீர் கலங்கிப் போய் குடிப்பதற்கு இயலாதிருந்தது. எனவே, சற்றுத் தொலைவில் உள்ள ஓடையில் இருந்து தண்ணீர் எடுத்து வரலாம் என்று சீடர் நடந்தார். ஆனால், அப்போது சீடரை புத்தர் அழைக்கவே, அவர் தண்ணீர் எடுக்காமல் திரும்பி வந்தார். குளத்தில் உள்ள தண்ணீர் கலங்கிப் போய் இருந்ததால்தான் ஓடையிலிருந்து தண்ணீர் எடுத்து வரச் சென்றதாக சீடர் கூறினார். ''தேவையில்லை'' என்ற புத்தர் ''குளத்து தண்ணீரையே குடிக்கலாம்'' என்றார். எனவே, மீண்டும் குளத்துக்குச் சென்ற சீடர், அதில் கலங்கல் அடங்கி தற்போது தெளிவாக சூரியஒளியில் தண்ணீர் பிரகாசிப்பதைக் கண்டார். தூய தண்ணீரைப் பாத்திரத்தில் முகர்ந்து கொண்டு வந்து புத்தரிடம் கொடுத்தார். ''எதுகுறித்தும் அவசரத்தில் முடிவெடுக்காதே. நீ பிரச்சினைகளைச் சந்திக்க நேரும்போது அனைத்தும் அமைதியாகும் வரை பொறுமையாயிரு... கலங்கிய குளத்தில் தூசு, தும்புகள் அடங்குவதைப் போல'' என்று போதித்தார் புத்தர்.

தொகுப்பு: எம்.ஏ.எஃப்.ஃபஷா, தரம் - $9^{G}$, திக்குவல்லை.

# விடுகதைகள்

1. பூட்டில்லாப் பெட்டிக்குள் போட்டிருக்கும் வைரக்கல்; வைரக்கல்லின் ஒளியாலே வையகமே தெரியும். அது என்ன?
2. பூவில் பிறக்கும்; நாவில் இனிக்கும். அது என்ன?
3. பிடி இல்லாத குடையைத் தொட முடியவில்லை. அது என்ன?
4. பதுங்கி வருவார் கள்வர் அல்ல; பாய்ந்து பிடிப்பார் காவலர் அல்ல. அது என்ன?
5. பச்சை உடற்காரன்; பழுத்த உதட்டுக்காரன். அவன் யார்?

**விடைகள்**

1. கண் 2. தேன்
3. வானம்
4. பூனை 5. கிளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துஷாரா கலைவட்டம் - 2010

## எக்ரோன் அகில இலங்கை சித்திரப் போட்டி

**(இலங்கையில் 15 பிரிவுகளின் கீழ் நடத்தப்படுகின்ற ஒரேயொரு மிகப்பிரமாண்டமான சித்திரப்போட்டி)**

எக்ரோன் நிறுவனத்தின் பிரதான அனுசரணையுடனும் விஜய், விஜய, பிலிந்து பத்திரிகைகளின் ஊடக அனுசரணையுடனும் துஷாரா கலைவட்டத்தினால் அகில இலங்கை ரீதியில் சித்திரப் போட்டி நடத்தப்படுகின்றது. வெற்றி பெறுபவர்களுக்கு சான்றிதழ்களுடன் பெறுமதி வாய்ந்த பரிசுகளும் வழங்கப்படும். மேற்படி போட்டி தொடர்பான விபரங்களும் நிபந்தனைகளும் கீழே தரப்பட்டுள்ளன.

**போட்டி விதிமுறைகள்**

- அளவு - அங்குலம் 14×18 அளவு
- வர்ணம் - சோக் (வர்ணப்பூச்சு), ஒயில் பெயின்ட், போஸ்டர் பெயின்ட், வோட்டர் கலர்ஸ் ஆகியனவற்றில் விரும்பியதைப் பயன்படுத்தலாம்.
- தலைப்பு - எந்வொரு தலைப்பிலும் சித்திரங்களை வரையலாம்.
- ஒருவர் ஆகக்கூடியதாக 5 சித்திரங்களை அனுப்பி வைக்கலாம்.
- பிரிஸில் போர்ட், கென்வஸ் துணி, ட்ரொயிங் பேப்பர் இவற்றில் விருப்பமான ஒன்றில் சித்திரத்தை வரையலாம்.

**போட்டிப் பிரிவுகள்**

- முன்பள்ளி மாணவர்கள் (5 வயதிற்குக் கீழானோர்)
- பாடசாலை மட்டத்தில் - தரம் 1 தொடக்கம் தரம் 13 வரையில் (13 பிரிவுகள்)
- பகிரங்க போட்டிப் பிரிவு - பல்கலைக்கழக மாணவர்கள் அல்லது வேறு எவரும் (18 வயதிற்குக் கீழ்)

நீங்கள் இந்தப் போட்டியில் Acron தயாரிப்பான எந்தவொரு வர்ணத்தையும் (சோக், வோட்டர் கலர்ஸ், போஸ்டர் கலர், ஒயில் பெயின்ட்) பயன்படுத்தினீர்களாயின் அவற்றின் அட்டைப் பெட்டியில் காணப்படும் வெள்ளை நிற லேபிளை சித்திரத்தின் பின்புறம் ஒட்டி அனுப்பவும். கண்காட்சிக்கென தெரிவு செய்யப்படாத 2500 சித்திரங்களுக்குரிய சான்றிதழ்கள் தபாலில் அனுப்பி வைக்கப்படும். Acron குறியீட்டு இலச்சினை ஒட்டப்பட்டுள்ள சித்திரங்கள் மட்டுமே போட்டிக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

| பரிசுத் தெரிவுகள் ( அகில இலங்கை) | | |
|---|---|---|
| முதலாவது இடத்தைப் பெறும் 15 பேர் | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக (தரம் 1 முதல் தரம் 13 வரை) | கிண்ணம், தங்கப்பதக்கம், பரிசு, சான்றிதழ் |
| இரண்டாவது இடத்தைப் பெறும் 15 பேர் | தெரிவிற்கு ஒருவர் வீதமாக | கிண்ணம்,வெள்ளிப்பதக்கம், பரிசு, சான்றிதழ் |
| மூன்றாவது இடத்தைப் பெறும் 15 பேர் | பிரிவுக்கு ஒருவர் வீதமாக | கிண்ணம், வெண்கலப் பதக்கம், பரிசு, சான்றிதழ் |
| Acron ஒயில் பெயின்ட் 15 போட்டியாளர்கள் | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதம் | கிண்ணம், தங்கப்பதக்கம், பரிசு, சான்றிதழ் |
| Acron அதிவிசேட வெற்றியாளர்கள் 15 | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக | கிண்ணம், தங்கப்பதக்கம், பரிசு, சான்றிதழ் |
| Acron விசேட வெற்றியாளர்கள் 150 | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக | தங்கப்பதக்கம், பரிசு, சான்றிதழ் |
| Acron சான்றிதழ் பெறுவோர் 400 | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக | விருது, சான்றிதழ் |
| திறமைச்சான்றிதழ் 2000 | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக | விருது, சான்றிதழ் |

Acron லேபிள் ஒட்டப்பட்ட 100 சித்திரங்களை அனுப்பச் செய்கின்ற ஆசிரிய, ஆசிரியைமாருக்கு நினைவுச் சான்றிதழும் ஊக்குவிப்புச் சான்றிதழும் வழங்கப்படும்.

(இதற்கென குறிப்பிட்ட 100 சித்திரங்களுடன் ஆசிரியர்/ஆசிரியையின் பெயர், முகவரி, வீட்டு முகவரி, தொலைபேசி இலக்கம் ஆகியனவற்றைக் குறிப்பிடல் வேண்டும்)

சர்வதேச மட்டத்திலும் தேசிய மட்டத்திலுமான நடுவர்களாலேயே வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவர் நடுவர்களின் தீர்ப்பே இறுதி முடிவாகும்.

வெற்றியாளர்களுக்கு தனிப்பட்ட ரீதியில் அறிவிக்கப்படுவதுடன், 'விஜய்' பத்திரிகையிலும் தொலைக்காட்சி, வானொலி மூலமும் அறிவிக்கப்படும். கண்காட்சிக்கென தெரிவு செய்யப்படுகின்ற 2500 சித்திரங்களும் தேசிய கலாபவனத்தின் பிரதான மண்டபங்கள் இரண்டிலும் கண்காட்சிக்கு வைக்கப்படுவதுடன் குறித்த 2500 சித்திரங்களுக்கான பரிசுகளும் சான்றிதழ்களும் ஜோன் டி சில்வா ஞாபகார்த்த அரங்கில் வைத்து வழங்கப்படும்.

**போட்டி முடிவுத்திகதி 2010 ஜூலை 31.**

**முகவரி:** துஷாரா கலைவட்டம், இலக்கம் - 16/19, பிங்ஹேன, பன்னிப்பிட்டி.
அல்லது கலர் கிராஃப்ட் லங்கா, 119, பெங்க்ஷால் வீதி, கொழும்பு-11.

**தொடர்புகளுக்கு** - 011 4962520, 0714483704.

## துஷாரா கலைவட்டம்

THUSHARA KALA KAVAY A

Color CRAFT

### அகில இலங்கை சித்திரப்போட்டி-2010

### Acron All Island Art Competition

விண்ணப்பப்படிவம் — Application Form

போட்டியாளரின் பெயர்:
Applicant's Name :

முன்பள்ளி/பாடசாலை/
பல்கலைக்கழகம்/பகிரங்க :
Pre School, Schools, University & Open Category :

பிறந்த திகதி:
Date of Birth :

ஆண்/பெண்
Sex :
ஆண் Female ☐ பெண் Male ☐

வீட்டு முகவரி:
Personal Address :

தொலைபேசி இல:
Telephone :

வகுப்பு:
Grade :

சித்திரத்தின் தலைப்பு:
Topic :

பாவித்துள்ள வர்ணம்:
Medium of Expression
Oil, Water color, Poster CLR, Pastels :

| ................................ | ................................ | ................................ |
|---|---|---|
| போட்டியாளரின் கையொப்பம் | திகதி | பெற்றோர்/பாதுகாவலர் கையொப்பம் |
| Applicant's Signature | Date | Parents/Guardians Signature |

பிரதான அனுசரணை: Acron COLSTAR — ஊடக அனுசரணை:

சித்திரக்கலையின் பேரபிமானம் பெற்ற முதன்மையாளர்களான துஷாரா கலைவட்ட அமைப்பு.

# ஜூரோங் பறவைகள் பூங்கா




சிங்கப்பூரில் உல்லாசப் பயணிகளை வெகுவாகக் கவர்ந்திழுக்கும் ஓர் இடமாக விளங்குகிறது 'ஜூரோங் பறவைகள் பூங்கா'. 'ஜூரோங்' மலைச்சரிவில் அமைக்கப்பட்டுள்ள இப்பூங்கா இரண்டு லட்சத்து இரண்டாயிரம் சதுர மீட்டரில் அமைந்துள்ளது.

பறவைகளுக்கான இத்தகைய காட்சியகம் ஒன்றை அமைப்பதற்கான எண்ணம் முதன் முதலாக 1968 ஆம் ஆண்டில் அப்போதைய நிதியமைச்சராக இருந்த 'கோ கெங் ஸ்வீ' (Goh Keng Swee) யின் மனதிலேயே உதித்தது. ரியோடி ஜெனைரோவில் நடைபெற்ற உலக வங்கிக்கூட்டமொன்றின்போது, அதன் விலங்கியல் தோட்டத்துக்கு டொக்டர் கோ சென்றிருந்தார். அதன்போது, ஏற்பட்ட ஆர்வத்தை தொடர்ந்தே இத்தகைய பூங்கா ஒன்றை ஆரம்பிக்க எண்ணம் கொண்டார்.

இந்த 'ஜூரோங் பூங்கா' மூலம் நகர வாழ்வில் அலுப்படைந்துள்ள மக்கள் இயற்கைச் சூழலில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டு மகிழ்ச்சியடைய வேண்டும் என கோ கெங் ஸ்வீ விரும்பினார். தற்பொழுது இந்தப் பூங்கா உலகப் பிரசித்தி பெற்ற பறவைகள் காட்சியகமாகத் திகழ்கிறது. இங்கு உலகெங்கும் உள்ள பறவைகள், அருகி வரும் பறவைகள் என ஏராளமான பறவைகள் உள்ளன.

பறவைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தமட்டில் உலகின் மிகப்பெரிய பறவைகள் பூங்காவாக இது திகழ்கிறது. இதன் அளவைப் பொறுத்தளவில் இது உலகின் இரண்டாவது பெரிய பூங்காவாகத் திகழ்கிறது.

முதலாவது பெரிய பூங்கா ஜேர்மனியிலுள்ள வோகல் பார்க் வோல்ஸ்ரோட் (Germany's Vogelpark Walsrode) என்பதாகும்.







| |
|---|
| படத்தை இங்கே ஒட்டவும் |

# விஜய் மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்:..................................

முகவரி:..................................
..................................

பாடசாலை:..................................

வகுப்பு:..................................

திகதி: ..................................

ஏற்கனவே அனுப்பியவர்கள் மீண்டும் அனுப்புவதை தவிர்க்கவும்.

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2037
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய் 'விழா உலா' த.பெ.எண் 2037 கொழும்பு

நானுஓயாவைச் சேர்ந்த சிவாநந்தர்-புஸ்பராணி தம்பதியரின் செல்வப் புதல்வன், லக்ஷான் ஒகஸ்டின், 27.05.2010 அன்று தனது முதலாவது பிறந்தநாளை தனது இல்லத்தில் வெகுவிமர்சையாகக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் உட்பட உறவினர்கள் அனைவரும் இயேசுவின் அருள் பெற்று, பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல்: வித்தியா தில்ருக்ஷி)



## 'விழா உலா' குறித்து உங்கள் கவனத்துக்கு...!

'விழா உலா' பகுதியில் பிறந்தநாள் வாழ்த்துக்கள் உட்பட ஏனைய சாதனையாளர்கள், விழாக்கள் பற்றிய தகவல்கள் கட்டணமின்றியே பிரசுரிக்கப்படுகின்றன.


பிறந்தநாள் வாழ்த்துக்களை அனுப்பும்போது அதுகுறித்த, படம் மற்றும் தகவலை பிறந்தநாள் கொண்டாடப்படவுள்ள தினத்திற்கு இரண்டு வாரங்களுக்கு முன்பதாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறும் சாதனையாளர்களின் படம் மற்றும் அதுகுறித்த தகவலை அனுப்பும்போது கட்டாயமாக குறித்த சாதனைகளுக்காக வழங்கப்பட்ட சான்றிதழின் நிழற் பிரதியையும் இணைத்து எமக்கு அனுப்பி வையுங்கள்.




மனிதன் மொழியைப் பயன்படுத்த முன்னரே தனது மன உணர்வுகளை ஓவியம் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளான். ஓவியத்தை ரசிப்பதற்கும் நயப்பதற்கும் மொழி அவசியமில்லை. எனவே, வயது வேறுபாடின்றி ஓவியங்களை வரைவதற்கு இலகுவான சில வழிமுறைகளை இப்பாடத்தொடர் மூலம் கற்றுத் தரவுள்ளோம்.

ஓவியம் வரைவதற்கு ஆர்வமுள்ளவர்கள் மட்டுமன்றி, ஏனையவர்களும் 'விஜய்' வார இதழ்களில் இனிவரும் பயிற்சிகளைத் தொடர்ந்து செய்வதன் மூலம் படிப்படியாக ஓவியம் வரைவதற்குக் கற்றுக்கொள்ளுங்கள். சகல தரப்பினரும் இப்பயிற்சி நெறியைப் பின்பற்ற முடியும்.

பெற்றோருக்கு:- உங்களின் சிறு முயற்சியுடன் குழந்தைகளைத் தானாக இயங்கவிடுங்கள். அவர்களுக்குத் தேவையான வழியைக் காட்டுங்கள். இதனூடாக குழந்தைகளின் மனதில் உள்ளவற்றை வெளிக்கொண்டு வரும் கலையாகிய ஓவியக் கலையை இலகுவாகப் பயிலக்கூடிய வாய்ப்பு அவர்களுக்குக் கிடைக்கும்.




அன்னப்பறவையை நாம் அறிவோம். அதனை எவ்வாறு வரைவது என்பதை ஆரம்ப உதாரணப் பயிற்சி ஒன்றூடாகச் செய்து பார்ப்போம்.

### ஆரம்ப உதாரணப் பயிற்சி

1. படத்தில் காட்டியவாறு வளைகோடு ஒன்றை வரைந்துகொள்ளுங்கள்.
2. அந்த வளைகோட்டிற்கு சமாந்தரமாக படத்தில் காட்டியவாறு மற்றுமொரு வளைகோட்டை வரையுங்கள்.
3. இரு கோடுகளையும் இணையுங்கள். அதில் அலகு (சொண்டு), கண், கழுத்து ஆகிய பகுதிகளைக் குறித்துக்கொள்ளுங்கள்.
4. சிறகுகளை வரைந்துகொள்ளுங்கள்.
5. தேவையான மாற்றத்தை செய்து பூரணப்படுத்துங்கள்.
6. தேவையற்ற கோடுகள், புள்ளிகளை அழித்து விடுங்கள்.

(தொடரும்...)






சஞ்சீவன் சந்திரகுமார், தரம் - 6, டென்ஸ்வர்த் த.வித்., டென்ஸ்வர்த்.



எம்.ஜோரா, தரம் - 7, தல்துவ மு.ம.வித்., தல்துவ.




எஃப்.அகீலா, தரம் - 10A, ஹிஸ்புல்லாஹ் ம.கல்., குருநாகல்.




பி.தசாந்தினி, தரம் - 9C, செண்.மேரிஸ் ம.கல்., பொகவந்தலாவ.



சி.ருத்ஷிகா, தரம் - 8, மயிலணி சைவ ம.வித்., சுன்னாகம்.



சபானா நஸிம், தரம் - 9A, ஆமினா ம.தே.பாட., மாத்தளை.



ஷஹீட் அன்வர், தரம் - 4A, அல்-அதான் ம.வித்., பதுளை.




ஆசிக் அஹமட், தரம் - 6, அல்-ஹஸ்னா மு.ம.வித்., பள்ளேகம.



க.சிரோமி, தரம் - 9A, நு/கொட்டகலை த.ம.வித்., கொட்டகலை.



ப.பிரதீபன், தரம் - 5, கரந்தன் இராமுப்பிள்ளை வித்., யாழ்ப்பாணம்.



எஃப்.ஃபஹ்மி, தரம் - 1, திப்பிட்டிய மு.ம.வித்., திப்பிட்டிய.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அரசர்கள் அதிசயித்த விருந்து



மூன்று அதிசயங்களையும் இவான் பத்திரமாக தனது நாட்டிற்குக் கொண்டுவந்து சேர்த்தான். அந்நேரத்தில் அரசரிடம் மூன்று ரஷ்யப் பேரரசர்களும் அவர்களது புதல்வர்களும் மூன்று அயல்நாட்டு அரசர்கள், இளவரசர்கள், அமைச்சர்கள், பிரபுக்கள் எனப் பலரும் விருந்திற்கு வந்திருந்தனர்.

வயதில் இளைய அறிவில் மூத்த இவான் விருந்தினர் மண்டபத்திற்கு வந்து தானே வாசிக்கும் இசைக்கருவி, நடனமாடும் வாத்து, பாடும் பூனை ஆகியவற்றை அரசரிடம் ஒப்படைத்தான். அரசர் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

''நல்லது, வயதில் இளைய அறிவில் மூத்த இவான், உண்மையிலேயே நீ எனக்காக அரிய காரியத்தைச் செய்திருக்கிறாய். அதற்காக நான் உன்னைப் பாராட்டுகிறேன். இதோ! உனக்குரிய பரிசு; எனது தலைமை லாயக்காரனாக இருந்த உன்னை இன்றிலிருந்து எனது பிரதான ஆலோசகனாக நியமிக்கிறேன்''

இந்த நியமனத்தால் பிரபுக்களும் அமைச்சர்களும் முகம் சுளித்து; ''ஒரு லாயக்காரன் நம்மிடையே வந்து அமர்வதா! எவ்வளவு கேவலம்! அரசர் என்ன நினைத்துக்கொண்டிருக்கிறார்!'' எனத் தமக்குள் பேசிக் கொண்டனர்.

அப்போது தானே வாசிக்கும் இசைக்கருவி ராகம் பாடியது. பாடும் பூனை பாடத்தொடங்கியது. நடனமாடும் வாத்து ஆடத்தொங்கியது. இதனால், அங்கே ஏற்பட்ட மகிழ்ச்சி ஆரவார மிகுதியால் விருந்தினர்கள் அனைவரும் எழுந்து ஆடத் தொடங்கினார்கள்.

நீண்ட நேரமாக அவர்கள் ஆடிக்கொண்டே இருந்தார்கள். அரசர்களின் கிரீடங்கள் ஒரு பக்கமாகச் சாய்ந்தவாறு தலைகளில் இருந்தன. இளவரசர்களும் சுற்றிச் சுற்றி வந்து ஆடிக்கொண்டிருந்தார்கள். பிரபுக்களும் அமைச்சர்களும் வியர்வை சிந்தியபடியும் பெருமூச்சு விட்டபடியும் ஆடினார்கள். மென்மேலும் அவர்கள் வேகமாக ஆடினார்களே தவிர, அவர்களால் ஆடுவதை நிறுத்த முடியவில்லை. இறுதியில் அரசர் கெஞ்சினார்.

''வேடிக்கையை நிறுத்து, வயதில் இளைய அறிவில் மூத்த இவானே. நாங்கள் அனைவரும் களைத்துப் போய்விட்டோம்''

அவர்களில் பரிதாபமான நிலையைப் பார்த்த இவான், மூன்று அதிசயங்களையும் ஒரு பையில் எடுத்து வைத்தான். இதனால், அங்கு நிசப்தம் நிலவியது. விருந்தினர்கள் தத்தம் இடங்களில் விழுந்து, மூச்சு வாங்கக் கூறினார்கள். ''இது மிக நல்ல உபசரிப்பு! இதுபோன்ற விருந்தை நாம் இதுவரை பார்த்ததில்லை'' என்று வியந்து கூறினர்.

இதனால், அந்நிய தேசங்களைச் சேர்ந்த அரசர்களும் இளவரசர்களும் அரசர் மீது பொறாமைப்பட்டனர். ஆனால், அரசருடைய மகிழ்ச்சியோ கரைபுரண்டோடியது.

அங்குள்ள அரசருடைய அமைச்சர்களும் பிரபுக்களும் தமக்கிடையே உரையாடினர்; ''இது இப்படியே போனால், சீக்கிரமே இந்த இவான் நாட்டிலேயே முதலாவது மனிதனாக வந்துவிடுவான். அவனை நாம் தொலைத்துக் கட்டவில்லை என்றால், அனைத்து அரச பதவிகளையும் கிராமத்தில் உள்ள தனது உறவினர்களுக்குக் கொடுத்துவிட்டு, நம்மைத் துரத்தியடித்து விடுவான்'' என்று கூறினர்.

மறுநாள் பிரபுக்களும் அமைச்சர்களும் ஒன்றுகூடி அரசருடைய புதிய ஆலோசகனாகிய இவானை தொலைத்துக் கட்டுவதற்கான வழியைச் சிந்திக்கலாயினர். இறுதியில் வயதான பிரபு ஒருவர் எழுந்து உரையாற்றினார்.

''நாம் முன்னர் அழைத்த அந்தக் குடிகாரனை அழைக்கலாம். இந்த மாதிரி விடயங்களில் அவன் கைதேர்ந்தவன்'' அவர்கள் குடிகாரனை அழைக்க, அவனும் வந்து தலைவணங்கி நின்றான்; ''என்னிடம் நீங்கள் எதனை விரும்புகிறீர்கள் என்பது எனக்கு மிக நன்றாகத் தெரியும். எனக்கு அரை வாளி வைன் கொடுத்தால், அரசருடைய புதிய ஆலோசகனாகிய இவானை எப்படித் தொலைத்துக் கட்டுவது என்பதை உங்களுக்கு நான் கூறுவேன்''

''அதனை முதலில் நீ கூறு, அரை வாளி வைன் உனக்காகக் காத்திருக்கிறது'' என்றனர். பிரபுக்களும் அமைச்சர்களும் கொடுத்த அரைவாளி வைனை அவன் காலி செய்து விட்டுக் கூறினான்;

''நமது அரசர் மனைவியை இழந்து நான்கு ஆண்டுகளாகிவிட்டன. அப்போதிலிருந்து பேரழகி இளவரசி அல்யோனாவைத் திருமணம் செய்ய மன்னர் பல முறை முயன்றும் அது வெற்றியடையவில்லை. அவளது நாட்டின் மீது மூன்று முறை படையெடுத்துச் சென்று பல போர்வீரர்களையும் இழந்துவிட்டார். தனது வலிமையாலும் அவளை அவரால் அடைய முடியவில்லை. வயதில் இளைய அறிவில் மூத்த இவானை அவர் அவளிடம் அனுப்பட்டும். அவன் போவான், ஆனால் திரும்பி வரவேமாட்டான்''

இதனால், பிரபுக்களும் அமைச்சர்களும் மகிழ்ந்தனர். மறுநாள் அரசரிடம் சென்று, ''அரசே! மிகவும் புத்திசாலியான ஆலோசகனைக் கண்டுபிடித்த நீங்கள் எவ்வளவு அறிவுமிக்கவர்! அவன் கொண்டுவந்த அதிசயங்களை பெற்று வருவது சுலபமானதல்ல. இப்போது பேரழகி இளவரசி அல்யோனாவை தன்னால் தூக்கி வரமுடியும் என்று பெருமையடித்துக் கொள்கிறான்''

பேரழகி இளவரசி அல்யோனாவின் பெயரை அரசர் கேட்டதும் தனது அரியணையிலிருந்து துள்ளி எழுந்தார் மன்னர். ''முன்னரே இதனை நான் ஏன் சிந்திக்காமல் போனேன்! அவளிடம் அனுப்ப இவனல்லவோ பொருத்தமான ஆள்!'' என்று கூறி மன்னர் மிக்க மகிழ்ச்சி அடைந்தார்.

(தொடரும்...)

# எருமையின் ஆணவம்



ஆற்றுநீர் தெளிவாக ஓடிக்கொண்டிருந்தது. தனக்குத் தேவையான இரையைத் தேடி உண்டுவிட்டு களைப்பைப் போக்குவதற்காக கருங்குருவி ஒன்று ஆற்றங்கரைக்கு வந்து, ஆற்றுநீரை ஆசையாகக் குடிக்க ஆரம்பித்தது.

அந்த நேரம் ஆற்று நீரில் பொத்தென்று ஏதோ விழுந்த சப்தம் கேட்டது. திடுக்கிட்ட கருங்குருவி சப்தம் வந்த திசையை நோக்கியது. அங்கே ஓர் எருமை ஆற்றுநீரில் குதித்து உருண்டு புரண்டு கொண்டிருந்தது. இதனால், தெளிவாக ஓடிக்கொண்டிருந்த ஆற்றுநீர் சேறும் சகதியுமாகியது.

கருங்குருவியால் கலங்கிய அந்த நீரைக் குடிக்க முடியவில்லை. இதனால், கருங்குருவி எருமையை ஆத்திரத்தோடு பார்த்தது. ''எருமையண்ணா! ஏன் இப்படி ஆற்றுநீரை வீணாகக் கலக்கிக் கொண்டிருக்கிறீர்கள்? என் போன்ற பறவைகள் எல்லாம் இரைதேடி முடித்துவிட்டு நீர் அருந்த வரும்வேளையில் நீங்கள் நீரைக் கலக்கிக் குடிக்க முடியாமல் செய்கிறீர்களே..

நீரைக் கலக்காமல் கரையேறிச் செல்லக்கூடாதா?'' என்று கேட்டது.

தன்னைப் பார்த்து துணிச்சலோடு கருங்குருவி பேசியதைக் கேட்ட எருமைக்கு ஆத்திரம் வந்துவிட்டது. ''கருங்குருவியே! யாரைப் பார்த்து என்ன கேள்வி கேட்கிறாய்? ஆற்றைக் கலக்குவதும் சேறோடு புரள்வதும் என் விருப்பம். என் விருப்பத்திற்குத் தடை போட நீ யார்? என் இஷ்டப்படி நீரைக் கலக்குவேன். உன்னால் முடிந்ததைச் செய்துகொள்'' என்று இறுமாப்புடன் மீண்டும் நீரைக் கலக்கியது எருமை.

''எருமையண்ணா! இந்த ஆறு உங்களுக்கு மட்டும் சொந்தமானதல்ல. எல்லோருக்கும் பொதுவானது. அப்படி இருக்கையில் நீங்கள் இந்த ஆற்றுநீரை உங்களுக்கு மட்டும் சொந்தமாக நினைத்துக் கலக்கிக்கொண்டிருக்கிறீர்களே?'' என்று கேட்டது கருங்குருவி.

எருமைக்கு மீண்டும் ஆத்திரம் வந்தது. ''கருங்குருவியே! வாயை மூடு. என் விருப்பம் எதுவோ அதை நான் நிறைவேற்றாமல் விடமாட்டேன். வீணாக என்னோடு பேசிக்கொண்டிருக்காதே. இந்தக் கலங்கிய நீரைக் குடிக்க முடிந்தால் குடி. இல்லையேல் இந்த இடத்தைவிட்டு எங்காவது செல். அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை'' என்று கூறியது.

இனிமேல் எருமையுடன் பேசி எந்தப் பயனும் இல்லை என்பதை உணர்ந்த கருங்குருவி அமைதியுடன் அங்கிருந்து பறந்து செல்ல முற்பட்டபோது, நீருக்குள் நின்ற எருமை, ''யம்மா... ம்மா..'' என்று கத்தத் தொடங்கியது. பின்னர் தனது தலையை ஆட்டியபடி வேகமாக கரையேறியது. அந்த எருமை ஏன் இப்படி அலறிக்கொண்டு கரையேறுகிறது என்று கருங்குருவிக்குப் புரியவில்லை. எருமையின் அருகே பறந்து வந்து அதன் உடலைச் சுற்றிப் பார்த்தது கருங்குருவி. எருமையின் உடம்பில் இரண்டு மூன்று அட்டைகள் ஒட்டிக்கொண்டு எருமையின் உடலைக் கடித்துப் புண்ணாக்கிக் கொண்டிருந்தன. அதனால் வலியைத் தாங்க முடியாமல் எருமை கதறுகிறது என கருங்குருவிக்குப் புரியத் தொடங்கியது.

எருமையின் பரிதாப நிலையை உணர்ந்த கருங்குருவிக்கு திடீரென ஒரு யோசனை தோன்றியது. உடனே எருமையின் முதுகில் ஏறிப் பலம் கொண்ட மட்டும், தன் அலகினால் அட்டையைக் கொத்தத் தொடங்கியது. பின்னர் மெல்ல மெல்ல அட்டையின் பிடி தளர்ந்தது. அவ்வாறே ஏனைய அட்டைகளையும் தன் அலகினால் கொத்திப் பிடியைத் தளரச் செய்தது கருங்குருவி. இதனால், எருமையின் உடலில் ஒட்டியிருந்த அட்டைகள் இரண்டும் பிடி தளர்ந்து கீழே விழுந்தன. எருமை நிம்மதியுடன் பெருமூச்சு விட்டபடி கருங்குருவியைப் பார்த்தது.

''கருங்குருவியே! உன் பேச்சை மதிக்காமல் இருந்த எனக்கு நல்ல தண்டனை கிடைத்துவிட்டது. இனிமேல் நான் ஆற்றுநீரைக் கலக்கமாட்டேன்'' என்று கண்ணீர் வடித்தபடி கூறியது.

உடனே கருங்குருவி, ''எருமையண்ணா! இந்த ஆறு நம் அனைவருக்கும் பொதுவான ஒன்று. இவ்வாறு பொதுச் சொத்துக்களுக்குத் தீங்கை ஏற்படுத்துகிறவர்கள் கண்டிப்பாகத் தண்டனைக்கு ஆளாக்கப்படுவர்'' என்று கூறியது. அன்று முதல் எருமை திருந்திய உள்ளமுடையதாக மாறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන் ஆயுபோவன் வணக்கம்

**இன்றைய பாடத்தில் அம்மாவுக்கும் கமலுக்கும் இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.**

**කමල්:** **අම්මේ බඩු ලෑස්තිද?**
அம்மே படு லேஸ்தித?
கமல்: அம்மா சாமான்களைத் தயார்படுத்திவிட்டீர்களா?

**අම්මා:** **ඔව් පුතා, මම සේරම අස්කෙරුවා.**
ஒவ் புதா, மம சேரம அஸ்கெருவா.
அம்மா: ஆம் மகன், நான் அனைத்தையும் தயார்படுத்திவிட்டேன்.

**අපි හෙට නේද යන්නේ?**
அபி ஹெட நேத யன்னே?
நாங்கள் நாளைக்குத்தானே போகிறோம்?



**මොකේද යන්නේ?**
மொகேத யன்னே?
எதில் போவது?

**කමල්:** **මම ලොරියකට එන්න කිව්වා. හෙට උදේ ඒවි.**
மம லொரியகட என்ன கிவ்வா. ஹெட உதே ஏவி.
கமல்: நான் லொரி ஒன்றுக்கு வரச் சொல்லியிருக்கிறேன். நாளை காலையில் வரும்.

**අම්මා:** **කීයට විතරද පුතා?**
கீயட விதரத புதா?
அம்மா: எத்தனை மணியளவில் மகன்?

**කමල්:** **උදේ හයට විතර එන්න කිව්වේ.**
உதே ஹயட விதற என்ன கிவ்வே.
கமல்: காலை ஆறு மணியளவில் வரச் சொன்னேன்.

**උදේන්ම ගිහින් බඩු අස්කරලා අපි සුනිල්ගේ ගෙදර රෑට ඉමු.**
உதென்ம கிஹின் படு அஸ்கறலா அபி சுனில்கே கெதர ரேட இமு.
காலையில் போய் சாமான்களை ஒழுங்குபடுத்திவிட்டு, இரவைக்கு நாங்கள் சுனில் வீட்டில் தங்குவோம்.

**පහුවදා උදේට ගෙදර කිරි උතුරුවලා පදිංචිවෙමු.**
பஹுவதா உதேட கெதர கிரி உதுறுவலா பதின்ச்சிவெமு.
மறுநாள் காலையில் வீட்டில் பால் பொங்கிக் குடி போவோம்.

**අම්මා:** **ඒක හොඳයි පුතා. ගෙදරකට යනකොට කිරි උතුරුවන්න ඕනේ.**
ஏக ஹொந்தய் புதா. கெதறகட யனகொட கிரி உதுருவன்ன ஓனே.
அம்மா: அது நல்லது மகன். ஒரு வீட்டுக்குப் போகும்போது பால் பொங்க வேண்டும்.

**කමල්:** **එහෙනම් අම්මා උදේන්ම ලෑස්ති වෙන්න.**
எஹெனம் அம்மா உதென்ம லேஸ்தி வென்ன.
கமல்: அப்போ, அம்மா காலையிலேயே ஆயத்தமாகுங்கள்.



**අම්මා:** **හොඳයි පුතා.**
ஹொந்தய் புதா.
அம்மா: நல்லது மகன்.

## பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

*உதாரணம்:* அம்மா சாமான்கள் தயாராகிவிட்டனவா?
**අම්මේ බඩු ලෑස්තිද?**

i. நாங்கள் ஆறு மணிக்குப் போவோம்.
.............................................................

ii. இரவில் சுனில் வீட்டில் தங்குவோம்.
.............................................................

iii. காலையில் பால் பொங்க வேண்டும்.
.............................................................






'Will' சகிதம் மூல வினைச்சொல்லைக் (Stem Verb) கையாண்டு அமைக்கப்பட்ட எதிர்கால வாக்கியங்களையும் மற்றும் 'going to' சகிதம் மூல வினைச்சொல்லைக் கையாண்டு அமைக்கப்பட்ட எதிர்கால வாக்கியங்களையும் (Future Tense) மேலும் இங்கே ஒப்பிட்டுப் பயில்வோம்.

| Future Tense will+stem Verb | Future Tense going to+stem Verb |
|---|---|
| (அ) You will participate. நீ பங்குபற்றுவாய். | (ஆ) You are going to participate. நீ பங்குபற்றப் போகின்றாய். |
| (இ) We will draw. நாங்கள் வரைவோம். | (ஈ) We are going to draw. நாங்கள் வரையப் போகின்றோம். |
| (உ) They will sit. அவர்கள் உட்காருவார்கள். | (ஊ) They are going to sit. அவர்கள் உட்காரப் போகின்றார்கள். |

(அ) You will participate in that function.
நீ அந்த வைபவத்தில் பங்குபற்றுவாய்.

(ஆ) You are going to participate in that function.
நீ அந்த வைபவத்தில் பங்குபற்றப் போகின்றாய்.

(இ) We will draw some pictures.
நாங்கள் சில படங்களை வரைவோம்.

(ஈ) We are going to draw some pictures.
நாங்கள் சில படங்களை வரையப் போகின்றோம்.

(உ) They will sit on the floor.
அவர்கள் நிலத்தில் உட்காருவார்கள்.

(ஊ) They are going to sit on the floor.
அவர்கள் நிலத்தில் உட்காரப் போகின்றார்கள்.

| Future Tense will+stem Verb | Future Tense going to+stem Verb |
|---|---|
| (அ) Rohan will collect. ரொஹான் சேகரிப்பான். | (ஆ) Rohan is going to collect. ரொஹான் சேகரிக்கப் போகின்றான். |
| (இ) Rohini will decorate. ரோஹினி அலங்கரிப்பாள். | (ஈ) Rohini is going to decorate. ரோஹினி அலங்கரிக்கப் போகின்றாள். |
| (உ) That parcel will fall. அந்தப் பொதி விழும். | (ஊ) That parcel is going to fall. அந்தப் பொதி விழப் போகின்றது. |

(அ) Rohan will collect foreign stamps.
ரொஹான் வெளிநாட்டு முத்திரைகளை சேகரிப்பான்.

(ஆ) Rohan is going to collect foreign stamps.
ரொஹான் வெளிநாட்டு முத்திரைகளை சேகரிக்கப் போகின்றான்.

(இ) Rohini will decorate the hall.
ரோஹினி அந்த மண்டபத்தை அலங்கரிப்பாள்.

(ஈ) Rohini is going to decorate the hall.
ரோஹினி அந்த மண்டபத்தை அலங்கரிக்கப் போகின்றாள்.

(உ) That parcel will fall down.
அந்தப் பொதி கீழே விழும்.

(ஊ) That parcel is going to fall down.
அந்தப் பொதி கீழே விழப் போகின்றது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலுமினிய அலுமாரியில் மின்சாரம் தாக்கி பயணிகள் மரணம்!

வரதட்சணையாக வழங்குவதற்கென பஸ்ஸில் கொண்டு செல்லப்பட்ட உலோகத்தினால் தயாரிக்கப்பட்ட அலுமாரியொன்று மின்சாரக் கம்பியில் வீழ்ந்து ஸ்பரிசித்ததால் பஸ்ஸில் பயணம் செய்த 28 பேர் மின்சாரம் தாக்கி மரணமாகிய சம்பவமொன்று இந்தியாவின் மத்திய பிரதேஷ் மாநிலத்தில் நடைபெற்றுள்ளது.

உரிய இடத்தை வந்தடைந்ததும் பஸ்ஸிலிருந்து இறங்க ஆயத்தமாகியபோதே பஸ்ஸின் மேல்புறம் இருந்த குறித்த அலுமாரி அருகாமையிலிருந்த மின்கம்பியின்மீது சரிந்துள்ளது. உடனே அந்த மின்சாரம் முழு பஸ்ஸிற்கும் கடத்தப்பட்டதாலேயே பயணிகளுக்கு இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

# முஷாரஃப் மீண்டும் அரசியலுக்கு வரவுள்ளார்



பாகிஸ்தானிலிருந்து வெளியேறி லண்டனில் வசித்து வருகின்ற அந்நாட்டின் முன்னாள் ஜனாதிபதியான முஷாரஃப் மீண்டும் பாகிஸ்தானில் அரசியலில் ஈடுபடுவதற்கு விருப்பம் கொண்டுள்ளதாக அறிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் நவாப் ஷெரீப் ஜனாதிபதியாக இருந்த காலகட்டத்தில் 1999 ஆம் ஆண்டு இராணுவப் புரட்சியின் மூலம் ஆட்சியைக் கைப்பற்றியிருந்தார் முஷாரஃப். 2008 ஆம் ஆண்டு கொல்லப்பட பெனாஸிர் பூட்டோவின் கணவரான அலி சர்தாரி தேர்தலின் மூலம் பாகிஸ்தான் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதையடுத்து முஷாரஃப் லண்டனில் தஞ்சம் புகுந்தார்.

தொடர்ந்தும் பதவியைத் தக்கவைத்துக் கொள்வதற்காக நீதிமன்றத்திற்கு அழுத்தங்களைக் கொடுத்தார் என்ற குற்றச்சாட்டின்பேரில் அவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்ற அச்சத்தினாலேயே அவர் நாட்டிலிருந்து வெளியேறியிருந்தார். மீண்டும் நாடு திரும்பினால் அவர் கைது செய்யப்படலாம் என்றும் கருதப்படுகின்றது.




இங்கு வழங்கப்பட்டுள்ள உலக நடப்புக்கள் தொடர்பான தகவல்களிலிருந்து கேட்கப்படும் கேள்விக்கு சரியான விடை அளிப்போரில் மூவருக்கு பெறுமதிக்க பாடசாலை உபகரணங்கள் சிலோன் பென்சில் நிறுவனத்தால் (அற்லஸ்) பரிசாக வழங்கப்படும்.

## அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

# தாய்லாந்துப் பிரதமர் இணக்கத்திற்குத் தயாராம்

தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தி நாட்டில் அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு காணவிரும்புவதாக





தாய்லாந்துப் பிரதமர் அபிசித் வெஜ்ஜிவா மக்களிடம் உறுதி வழங்கியுள்ளார்.

அந்நாட்டில் நடைபெற்ற செஞ் சட்டைக்காரர்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை பொலிஸாரைக் கொண்டு முடிவிற்குக் கொண்டு வந்ததையடுத்தே மேற்படி கருத்தை பிரதமர் தெரிவித்துள்ளார்.

பிரச்சினைகளுக்குத் தீர்வு காண ஐந்து அம்சத் திட்டமொன்றை அறிமுகப்படுத்தவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். எனினும், எதிர்வரும் நொவெம்பர் மாதம் பொதுத்தேர்தலை நடத்துவதாக ஆரம்பத்தில் தெரிவித்திருந்த கருத்துக்கள் பற்றி தற்போது அவர் எதனையும் தெரிவிக்கவில்லை.

பிரதமரை உடனடியாகப் பதவி விலகுமாறும் பொதுத்தேர்தலை நடத்துமாறும் கோரியுமே செஞ் சட்டைக்காரர்கள் மக்கள் சார்பாகப் போராட்டங்களை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அற்லஸ் கேள்வி - 258

**கேள்வி:** பாகிஸ்தான் இராணுவப் புரட்சியின்மூலம் முஷாரஃப் எத்தனையாம் ஆண்டில் ஆட்சியைக் கைப்பற்றினார்?

சரியான விடை......................................

உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 258,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.

## போட்டி இல - 256 இன் சரியான விடை: டேவிட் கெமருன்

**பரிசு பெறுவோர்**

ராஜரட்ணம் ஜெனே ரெஷான்,
ஸ்டோனிக் கிளிப் குரூப், T.B டிவிஷன்,
கொட்டகலை.

அபிராமி கனகசபை,
'அபிராமி வாசம்', ஐயனார் வீதி, சண்டிலிப்பாய்.

ஏ.எஃப்.சஃப்ரா,
212/3, மடலஸ்ஸ, கெகுனுகொல்ல.

# ஐஸ்கிறீம் ஊட்டி கின்னஸ் சாதனை!

ஒரே இடத்தில் வைத்து அதிக எண்ணிக்கையானோர் ஐஸ்கிறீம் ஊட்டிக்கொண்ட கின்னஸ் சாதனையொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் 'இலினோஸ்' என்ற பிராந்தியத்திலேயே இந்த சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது.

'ஒகஸ்டானா' என்ற பாடசாலையின் 150 வருட பூர்த்திவிழாக் கொண்டாட்ட வைபவத்திற்காக வருகை தந்திருந்தவர்களே இந்த சாதனையை நிகழ்த்தியுள்ளனர்.



மேற்படி வரலாற்று முக்கியத்துவம்மிக்க நிகழ்வை முன்னிட்டு பிரபல 'வைட்ஸ் ஐஸ்கிறீம்' என்ற ஐஸ்கிறீம் தயாரிப்பு நிறுவனம் 'ஒகஸ்டானா வைக்கிங் பிரைட்' என்ற பெயரில் புதிய சுவைகொண்ட ஐஸ்கிறீம் வகையொன்றைத் தயாரித்திருந்தது.விழாவில் கலந்து கொள்ள வந்திருந்த ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என்று மொத்தமாக 2694 பேர் இந்த சாதனையை நிகழ்த்துவதற்காக அணிதிரண்டனர். 'ஒகஸ்டானா' பாடசாலை மைதானத்தில் கூடிய இவர்கள் வித்தியாசமான ஒருமுறையிலேயே இந்த ஐஸ்கிறீமைச் சாப்பிட்டனர். அதாவது, அனைவரும் வட்டவடிவில் நின்றுகொண்டு தமது கையில் இருந்த ஐஸ்கிறீமை வலது பக்கத்தில் நின்றவருக்கு ஊட்டிவிட்டனர்.

அவ்வாறே, இடது கை பக்கம் நின்றவர் தமக்கு ஊட்டுவதை இவர்கள் சுவைபடப் பார்த்தனர்.இப்படியே ஆளுக்கு ஆள் ஐஸ்கிறீமை ஊட்டிக் கொண்டனர்.

இதற்கு முன்னர், ஒரே இடத்தில் அதிக எண்ணிக்கையானோர் ஐஸ்கிறீம் சாப்பிட்ட சாதனையை நிகழ்த்தியிருந்தது ஸ்பெயின் நாட்டிலாகும். அதில் 2500 பேர் கலந்து கொண்டிருந்தனர். இந்த சாதனையே தற்போது முறியடிக்கப்பட்டுள்ளது.

## தெரிந்து கொள்ளுங்கள்



★ 25 மில்லியன் டொலர் செலவு செய்து சர்வதேச விண்வெளி ஆய்வுகூடத்தில் 14 நாட்கள் தங்கி வந்த ஹங்கேரி நாட்டைச் சேர்ந்த கோடீஸ்வரரின் பெயர்? -சார்ள்ஸ் சிமோனி



★ இந்தியா 2007 ஆம் ஆண்டு விண்வெளிக்கு அனுப்பிய தனது முதலாவது வணிக செய்மதிக்கு என்ன பெயர் சூட்டியிருந்தது?

-AGILE (இத்தாலியில் தயாரிக்கப்பட்டது)

★ 2007 ஆம் ஆண்டு பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாடு எங்கு நடைபெற்றது?

-செங்கியில்

★ சொக்கலட் மற்றும் ரகசிய வங்கிக் கணக்குகளுக்கு பேர் போன நாடு எது?

-சுவிட்சர்லாந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகள்; உலகின் கவனத்தை ஈர்த்துள்ள தெ.ஆபிரிக்கா

ஜூன் 11 ஆம் திகதி உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகள் ஆரம்பமாகவுள்ளமை நாம் அறிந்ததே. இப்போட்டிகளை நடத்தவுள்ள தென்ஆபிரிக்காவில் அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இப்போட்டிகளை நடத்துவதன் மூலம் தென்ஆபிரிக்காவில் உல்லாசப் பயணத்துறையிலும் மற்றும் அபிவிருத்தித் துறையிலும் பலவித முன்னேற்றகரமான மாற்றங்கள் ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## பாதுகாப்பு ஏற்பாடுகள்

உலகக்கிண்ணப் போட்டிகளை முன்னிறுத்தி தென்ஆபிரிக்கா அரசாங்கம் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. விமான நிலையத்திலிருந்து பிரதான நகரங்கள் வரையில் காணப்படுகின்ற வீதிகளில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படவுள்ளன. அதிவிசேட தொழில்நுட்பத்தை பாவித்து தகவல் பரிமாற்றங்கள் நடைபெறுவதுடன் சிறப்பு ஹெலிகொப்டர் பாதுகாப்புப் படைப் பிரிவொன்றும் ஆயத்தப்படுத்தப்பட்டுள்ளதாகவும், இதற்கென 40 ஹெலிகொப்டர்கள் பயன்படுத்தப்படவுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

போட்டிகள் நடைபெறுகின்ற காலப் பகுதிகளில் அனைவருக்கும் நியாயம் கிடைக்கப்படல் வேண்டும் என்பதற்காக நீதிமன்றப் பணிகள் வாரத்தின் ஏழு நாட்களிலும் 24 மணிநேரமும் நடைபெறும். மேலும், பயங்கரவாதத் தாக்குதல்கள், வன்முறைகள் மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகள் நடைபெறுமானால் அவற்றை தடுப்பதற்காக விமானங்களும் தயார் நிலையில் உள்ளன.

குறிப்பாக தென்ஆபிரிக்க பொலிஸார் 640 மில்லியன் ரூபா நிதியை செலவு செய்து கால்பந்தாட்டப் போட்டிகளுக்காக 10,000 பேரைக் கொண்ட விசேட முழுப்படைப் பிரிவொன்றையும் ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன், ஒட்டுமொத்தமாக போட்டியையொட்டிய பாதுகாப்புக் கடமைகளுக்கென 41,000 பொலிஸ் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், மேற்படி உலகக்கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள 32 நாடுகளிலிருந்தும் அவ்வவ் நாடுகளின் சார்பாகவும் பொலிஸ் படைபிரிவொன்றும் தென் ஆபிரிக்காவிற்கு விஜயம் செய்யவுள்ளது.

கலாசாரம் மற்றும் மொழி பிரச்சினைகளை தவிர்த்து தென்ஆபிரிக்க பொலிஸாருடன் ஒன்றிணைந்து இவர்களால் பணியாற்றக்கூடியதாக இருக்கும் என்றும் குறிப்பிடப்படுகின்றது.

## உலகக்கிண்ண போட்டிகள் நடைபெறவுள்ள அரங்குகள்




# அனைத்து டெஸ்ட் நாடுகளுக்கும் சமவாய்ப்பு வழங்கப்படவேண்டும்

## —சங்கக்கார

டெஸ்ட் அந்தஸ்து பெற்றுள்ள அனைத்து நாடுகளுக்கும் வருடாந்தம் சமஅளவிலான டெஸ்ட் போட்டிகளுக்கான வாய்ப்புக்கள் வழங்கப்படவேண்டும் என்று இலங்கை அணியின் தலைவரான குமார் சங்கக்கார தெரிவித்துள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் சபையினால் உலகக்கிண்ண டெஸ்ட் போட்டிகள் நடத்தப்படவுள்ளமை குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவித்துள்ள சங்கக்கார, "இந்திய அணி இலங்கைக்கு விஜயம் செய்து 3 டெஸ்ட் போட்டித்தொடர்களில் பங்குபற்ற இணக்கம் தெரிவித்துள்ளமை இந்த வருடத்திற்கு அது நமக்கு ஆறுதல் தருவதாக உள்ளது. எனினும், டெஸ்ட் போட்டிகள் தொடர்பாக இலங்கை வீரர்களுக்கு கிடைக்கப்பெறுகின்ற வாய்ப்புக் குறைந்துகொண்டே செல்கின்றது.



இந்தியாவுடனான போட்டிகள் உட்பட இந்த வருடத்தில் இலங்கை அணி 5 டெஸ்ட் போட்டிகளில் மாத்திரமே கலந்துகொள்ள வாய்ப்புக் கிட்டியுள்ளது.

அடுத்த வருடம் டெஸ்ட் போட்டிக்காக இலங்கை அணி லண்டன் செல்வது ஐந்து வருடங்களின் பின்னரேயாகும். மேலும், தென் ஆபிரிக்காவில் இறுதியாக 2002 ஆம் ஆண்டுதான் இலங்கை அணி போட்டியிட்டது. எனவே, உலகின் முதல்தர அணிகள் வருடாந்தம் ஒரு தடவைக்கு மேல் டெஸ்ட் போட்டிகளில் கலந்து கொள்வதற்கு காலஅட்டவணை அமைக்கப்படல் வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

## ஒருநாள் முக்கோண தொடர்

ஒகஸ்ட்

| | | | |
|---|---|---|---|
| 02 - | இந்தியா | - | நியூஸிலாந்து (தம்புள்ள) |
| 04 - | இலங்கை | - | நியூஸிலாந்து (தம்புள்ள) |
| 07 - | இலங்கை | - | இந்தியா (எஸ்.எஸ்.ஸி) |
| 09 - | இலங்கை | - | நியூஸிலாந்து (எஸ்.எஸ்.ஸி.) |
| 11 - | இந்தியா | - | நியூஸிலாந்து (எஸ்.எஸ்.ஸி) |
| 13 - | இலங்கை | - | இந்தியா (எஸ்.எஸ்.ஸி) |
| 15 - | இறுதிப்போட்டி | | (எஸ்.எஸ்.ஸி) |



# வாஸ், மாலிங்க இங்கிலாந்து விஜயம்

முன்னர் இலங்கை அணியில் இடம்பெற்றிருந்த சமிந்தவாஸ் மற்றும் மாலிங்க பண்டார ஆகிய இருவரும் இங்கிலாந்தில் நடைபெறவுள்ள உள்ளூர் பிராந்திய அணிகளுக்கிடையிலான 'டுவென்டி டுவென்டி' கிண்ணப் போட்டித்தொடரில் விளையாடுவதற்கான வாய்ப்பினைப் பெற்றுள்ளனர்.



இதுகுறித்து சமிந்தவாஸ் கருத்துத் தெரிவிக்கையில், இந்தியாவில் நடைபெற்ற ஐ.பி.எல் போட்டிகளில் 'டெக்கான் சார்ஜர்ஸ்' அணிக்காக போட்டியிட்டு தனது திறமையை வெளிக்காட்டியதன் பெறுபேறாகவே தற்போது இங்கிலாந்தில் பிராந்திய அணியில் விளையாடுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும், அவர் இலங்கை தேசிய அணி தன்னைப் பயன்படுத்தாதபோதிலும் உலகிலுள்ள ஏனைய அணிகள் தன்மீது நம்பிக்கை வைத்துள்ளதாகவும் இன்னமும் போட்டியிடக்கூடிய வலுவான நிலையிலேயே தான் இருப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மாலிங்க பண்டார தெரிவிக்கையில்; "இங்கிலாந்தின் 'கென்ட்' பிராந்திய அணியில் போட்டியிடுவதற்காக தனக்கு அனுமதி வழங்கிய இலங்கை கிரிக்கெட் சபைக்கு நன்றி தெரிவிக்க விரும்புகின்றேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விண்வெளியை துப்பறியும் 'ஹபல்'



விண்வெளி ரகசியங்களை எமக்கு வெளியிடுவதில் ஹபல் தொலைக்காட்டி முன்னிலை வகிக்கின்றது. விண்வெளியில் நிலைகொண்டுள்ள இந்த தொலைக்காட்டி கடந்த 20 வருடங்களாக விண்வெளி பற்றிய தகவல்களை வெளியிட்டு சாதனை படைத்துள்ளது. சுமார் 13.7 பில்லியன் வருடங்கள் பழைமை வாய்ந்த இந்த பிரபஞ்சத்தின் பல்வேறு ரகசியங்களை கடந்த இருபது வருடங்களாக சிறிது சிறிதாக வெளிப்படுத்திய பெருமை ஹபல் தொலைக்காட்டியையே சாரும்.

அந்தவகையில், சூரியன், கிரகங்கள் மற்றும் ஏனைய நட்சத்திரங்கள் உள்ளிட்ட விண்வெளி வஸ்துக்கள் பற்றியும் பிரபஞ்சத்தின் தொலைதூரத்தில் நிகழும் அனைத்து விடயங்களையும் படங்களின் மூலம் எமக்கு காண்பிக்க ஹபல் தொலைக்காட்டியே வழிவகுக்கின்றது.

## 20 வருடகால சேவை

ஐக்கிய அமெரிக்காவின் 'டிஸ்கவரி' விண்ணோடத்தின் உதவியுடன் 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதி இது





விண்வெளிக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அதன்பின்னர் மேற்கொள்ளப்பட்ட சில விண்வெளி நடவடிக்கைகளின்போது ஹபல் தொலைக்காட்டி பழுதுபார்க்கப்பட்டது. தொடர்ந்து தொழில்நுட்பத்தின் அதித வளர்ச்சியின் காரணமாக இத்தொலைக்காட்டியுடன் அதிநவீன உபகரணங்கள் பலவும் இணைக்கப்பட்டன.

## பழுது பார்ப்பும் மீள் நிரப்பலும்

கடந்த ஆண்டு மே மாதம்தான் ஹபல் தொலைக்காட்டி இறுதியாகப் புதுப்பிக்கப்பட்டது. இந்த நடவடிக்கைக்காக 'அட்லாண்டிஸ்' விண்ணோடத்தில் ஒரு குழுவினர் விண்வெளிக்குச் சென்று, ஹபல் தொலைக்காட்டியில் இருந்த பழைய கெமராவை கழற்றி விட்டு அதிநவீன தொழில்நுட்பத்துடன் நிர்மாணிக்கப்பட்ட டிஜிடல் கெமராவைப் பொருத்தினர். இதுதவிர, 220 அமெரிக்க டொலர் பெறுமதியான புத்தம்புதிய உபகரணங்கள் பலவற்றையும் அதில் பொருத்தினர். இதனூடாக ஹபல் தொலைக்காட்டியின் 20 ஆவது நிறைவு தினத்தில் பிரபஞ்சத்தின் மேலும் பல ரகசியங்களை அறியக்கூடிய வாய்ப்புக் கிட்டியுள்ளதாக ஹபல் தொலைக்காட்டியின் தொடர்பு அதிகாரியும் விஞ்ஞானியுமான டேவிட் லெக்ரோன் குறிப்பிடுகிறார்.

"இன்று இருப்பது 1990 ஆம் ஆண்டு விண்வெளிக்கு அனுப்பப்பட்ட ஹபல் தொலைக்காட்டி அன்று. மாறாக, அதிநவீன தொழில்நுட்பத்தால் நிறைந்த பரிபூரணமான நவீன ஹபல் தொலைக்காட்டியாகும்" என ஹபல் செயல்திட்டத்தின் முகாமையாளர் பிரெஸ்டன் பர்வி பெருமையுடன் குறிப்பிடுகிறார்.



விண்வெளியில் நிலைகொண்டுள்ள இத்தொலைக்காட்டிக்கு 'ஹபல் தொலைக்காட்டி' என்ற பெயர் பிரபல வானவியலாளரான 'எட்வின் ஹபல்' அவர்களைக் கௌரவிக்கும் பொருட்டே சூட்டப்பட்டது.

"ஹபல் தொலைக்காட்டி விண்வெளிக்கு அனுப்பியது மனித வரலாற்றில் மிகவும் முக்கியமான திருப்புமுனையாகும். எமது பிரபஞ்சத்தின் அறியாத பல உண்மைகளை, தகவல்களை அறிந்து கொள்ளும் வாய்ப்பு இதனூடாக கிடைக்கின்றது. எதிர்காலத்தில் மென்மேலும் பல புதிய ஆய்வுகளைச் செய்து, தகவல்களைப் பெற விஞ்ஞானிகள் எதிர்பார்த்துள்ளனர்.

# நாஸா பலூன் விபத்தில் சிக்கியது

அமெரிக்காவின் நாஸா நிறுவனத்தினரும் அவுஸ்திரேலிய விஞ்ஞானிகளும் இணைந்து விண்வெளியை ஆய்வு செய்வதற்காக கடந்த சில தினங்களுக்கு முன்னர் பலூன் ஒன்றை விண்ணுக்கு அனுப்ப ஆயத்தமாகினர். இந்த பலூனுடன் மிகவும் பெறுமதி வாய்ந்த பரிசோதனை உபகரணங்கள் பலவற்றையும் விண்வெளிக்கு அனுப்பவும் திட்டமிடப்பட்டிருந்தது.

பூமியிலிருந்து 40 கிலோமீற்றர் உயரத்தில் இதனை விண்ணுக்கு ஏவி, எக்ஸ் கதிர் மற்றும் கெமரா கதிர் என்பன குறித்து பல்வேறு ஆய்வுகளை மேற்கொள்ளவே விஞ்ஞானிகள் எண்ணியிருந்தனர்.

இந்த முயற்சியை அவுஸ்திரேலியாவின் எலிஸ் ஸ்பிரிங்ஸ் நகரத்திற்கு அண்மையில் உள்ள ஓரிடத்தில் இருந்து விண்ணுக்குச் செலுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், இறுதியில் விஞ்ஞானிகள் சற்றேனும் எதிர்பாராத நிலையில், அந்த பலூன் திடீரென காற்றில் அடிபட்டு இழுத்துச் செல்லப் பட்டது. மில்லியன் கணக்கான பெறுமதி வாய்ந்த உபகரணங்கள் அருகில் இருந்த மோட்டார் வாகனமொன்றில் மோதி சின்னாபின்னாமாகின. இதனால், அந்த முயற்சி இறுதியில் இடைநிறுத்தப் பட்டது.



## ஷ்... உங்களுக்கு மட்டும்!



* பூமியைச் சுற்றி வந்த முதல் செயற்கைக்கோள் - ஸ்புட்னிக்
* பூமியைச் சுற்றி வந்த முதலாவது அமெரிக்க வீரரும் மூன்றாவது நபருமாகத் திகழ்பவர் - ஜோன் எச்.க்லென்



* சூரியனுக்கும் பூமிக்கும் இடைப்பட்ட தூரம் - 9 கோடியே 50 லட்சம் மைல்கள்
* பூமி சூரியனுக்கு தொலைவில் இருக்கும் நாள் - ஜூலை 3
* பூமி சூரியனுக்கு அருகிலிருக்கும் நாள் - ஜனவரி 3
* பூமி சூரியனைச் சுற்றுகிறது என்று கூறியவர் - கொபர்நிக்கஸ்
* பூமியைச் சுற்றி வந்த முதலாவது விண்வெளி வீராங்கனை - வெலென்டினா டெரெஷ்கோவா






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புள்ளிக்கோட்டின் வழியே சொற்களை எழுதுக

1




## பிழைகளைத் திருத்துக

4

1. சரண்ணாலயம் - ..............................
2. நிற்கதி - ..............................
3. பின்ணணி - ..............................

## வழி காட்டுங்கள்



2

## விடை தருக

5

(இங்கிலாந்து/லியனாடோ டாவின்சி/ அடம் ஸ்மித்/ஸ்பெயின்)

1. காளைச் சண்டையை தேசிய விளையாட்டாகக்கொண்ட நாடு
..............................
2. கிரிக்கெட்டின் தாயகம்
..............................
3. உடல் உறுப்புக்களின் படங்களை முதலில் வரைந்தவர்
..............................
4. 'பொருளாதாரத்தின் தந்தை' என சிறப்பித்துக் கூறப்படுபவர்
..............................





**தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்**

1,2,3,4,5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2010.06.09 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.


**அற்லஸ் அறிவுக்கு விருந்து 263**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**

## அறிவுக்கு விருந்து - 260 விடைகள்

**போட்டி: 01**




**போட்டி: 02**



**போட்டி: 03**

why, thing, chick, sheep, there, shovel, thimble, which, church, whale

**போட்டி: 05**

1. கீரை - கட்டு
2. முகில் - கூட்டம்
3. மலர் - கொத்து
4. சாவி - கோர்வை
5. மலை - தொடர்

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 260 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
எம்.நுஹறாஸ், தரம் - 9D, பாபுல் ஹஸன் ம.கல்., வரகாபொளை.

**போட்டி: 02**
ஏ.பிரியதர்சன், தரம் - 1D, இந்துக் கல்., கொழும்பு-04.

**போட்டி: 03**
மு.லவனேஷ், தரம் - 7F, திருத்துவக் கல்., கண்டி.

**போட்டி: 04**
எம்.எச்.முஹம்மது, தரம் - 6, அஸ்ஸபா க.வித்., மாத்தறை.


**போட்டி: 05**
எம்.ஹுதைபா, தரம் - 5, ஸாஹிரா கல்., திருகோணமலை.

**பாராட்டுப் பெறுவோர்:**

- ஆயிஷா நௌஸர், தரம்-4, மின்ஹாத் தே.பாட., திக்குவல்லை.
- அஸால் அஹமட், தரம்-3A, ரபுக்கன.
- ஜி.பிரியங்கா, பாலர் வகுப்பு, தெஹியோவிட்ட.
- எம்.ஸப்கத், தரம்-4C, அல்-மனார் ம.கல்., மருதமுனை.
- கே.சுதர்ஷினி, தரம் - 9B, ஜப்பார் மத்.கல்., கண்டி.
- வி.விக்னேஸ்வரன், தரம்-8, மூன்பிளேன் த.வித்., நுவரெலியா.
- லா.கிறிஸ்டோபர், சாமிமலை.
- முஹம்மட் ராயிஸ், வெலம்பொட.
- ந.வதனி, அச்சுவேலி.
- எ.்ப்.ஜெஸ்லா, தரம்-9[illegible], மின்ஹாத் தே.பாட., திக்குவல்லை.

## கொடுக்கப்பட்டுள்ள தரவுகளுக்கேற்ப வட்டமிடுக

3




ஒல்லாந்தர் தொடக்கம் இராமாயணம் வரை கற்றுத்தரும் அனைத்து அம்சங்களிலும் குறை ஏது...?

-ஹிமாஸா வாஹிட், தரம்-8D,
அல்-முபாரக் ம.கல்., மல்வானை.




இவ்விதழில் புதுப்புது விடயங்கள் பலவற்றை உள்ளடக்கியிருப்பதை உணரக்கூடியதாக இருந்தது. எனினும், ஏற்கனவே பிரசுரமான குறுக்கெழுத்துப் போட்டியைக் காணவில்லை.

-கு.சிந்தூரியா, தரம்-8D,
சாவகச்சேரி இ.கல்.,
சாவகச்சேரி.

***★ ஏற்கனவே வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை அனுப்புவதில் தேக்கநிலை ஏற்பட்டுள்ளதனால், அதனை நிவர்த்தி செய்யும்பொருட்டு தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. விரைவில் எதிர்பாருங்கள். (ஆ-ர்)***

அறிவுசார் பத்திரிகையாகிய 'விஜய்' தமிழ் வாசகர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். அனைத்தும் நிறைவாக உள்ளதே ஒழிய, குறைவாக எதுவும் இல்லை.

-ரஞ்ஜித் கார்மேகம்,
ஸ்ரீ லக் விவ் ஹொலிடே இன், ஹப்புத்தளை.

உலகின் முதல் பத்திரிகை பற்றிய கட்டுரை சுவாரஸ்யமானது. கடிதம் போல் இருந்த பத்திரிகையின் பரிணாம வளர்ச்சியை இன்றைய பத்திரிகைகள் வெளிக்காட்டுகின்றன.

-அமுதா
சந்திரசேகரன்,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.




பா...பா...பாம்பு!! பயமாக இருந்தாலும் வாசிக்கத் தூண்டியது. உங்களுக்குத் தெரியுமா பகுதியில் அடங்கியிருந்த விடயங்கள் சூப்பர்!

-நஸ்ரின் மிப்லாஸ், குருநாகல் வீதி, பந்தாவ.

2012 இல் இரண்டு சூரியன்கள் பற்றிய விடயத்தைப் படித்தேன். அச்சப்பட வைத்தது. ஆச்சரியப்பட வைத்தது. இறுதியில் நிம்மதிப்படவும் வைத்தது.

-பி.சுஜீவன்,
எல்விடிகல மாவத்தை, நாரஹேன்பிட்டி.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் போன்று விஞ்ஞானம், ஆங்கிலம், வரலாறு, தமிழ் போன்ற பாடங்களுக்கான மாதிரி வினாத்தாள்களையும் பிரசுரிக்கவும்!

-நுஸ்லா கலீல்,
ப்ளூமண்டல் வீதி, கொழும்பு-15.

***★ சகல பாடங்களுக்குமான வினாத்தாள்களை பிரசுரிக்க வேண்டின், அனைத்து மட்ட வாசகர்களையும் திருப்திப்படுத்த முடியாத நிலை ஏற்படும். எனினும், தேவைக்கேற்ப சிறப்புப் பக்கங்கள் பிரசுரிக்கப்படும். வயது வித்தியாசமின்றி அனைவருக்கும் சகல துறைகளிலும் பரந்த அறிவினை வழங்குவதே 'விஜய்'யின் நோக்கமாக இருக்கின்றது. (ஆ-ர்)***

இந்த இதழில் (02.06.2010) வெளியாகியிருக்கும் ஆக்கங்கள் குறித்து உங்கள் விமர்சனங்களை தபாலட்டையில் மாத்திரம் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.
அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 09.06.2010.

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**வாசகர் மடல்,**
**'விஜய்'**
**த.பெ.எண் 2037,**
**கொழும்பு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞாபக மறதி ஏற்படாமல் இருக்க...



படிப்பவற்றை சுருக்கக் குறிப்பாக எழுதுங்கள்.

''படிப்பவை மனதில் நிற்கவே மாட்டேனென்கிறது'' இது பாடசாலைக்கு செல்லும் மாணவ, மாணவியர் பலர் கூறும் பொதுவான கருத்தாகும். கற்றவற்றை நினைவில் கொள்ளல் அவசியமாகும். கற்றவற்றை எப்படி மனதில் பதிவு செய்து கொள்ளலாம் என்பதனைப் பார்ப்போம்.

## ஞாபக சக்தியைப் பெருக்குவதற்கான முதல் செயற்பாடு

முதலில் 'ஞாபக மறதி' என்ற எண்ணத்தைக் கைவிடுதல் அவசியமாகும். இப்படியான எண்ணம் இருக்கும் வரை நீங்கள் எவ்வளவுதான் கற்றாலும் கற்றவை நினைவில் நிற்காது. எனவே, எனக்கு நல்ல நினைவாற்றல் உள்ளது என்ற சிந்தனையை மனதில் வளர்த்துக் கொள்ளுங்கள்.

## கற்பதற்கு உகந்த இடம்

கற்றவை நினைவில் நிற்பதில் கற்கும் இடமும் செல்வாக்குச் செலுத்துகின்றது. சுத்தமான, வெளிச்சமான, காற்றோட்டம் நிறைந்த இடமே கற்பதற்கு உகந்த இடமாகும். இந்த மூன்று காரணிகளும் மூளையின் செயற்பாட்டில் பெரும் பங்கு வகிப்பதாக உளவியலாளர்கள் தெரிவிக்கின்றனர். சுத்தமற்ற, இருள் நிறைந்த இடம் மனதின் உற்சாகத்தைக் குறைத்துவிடும். உற்சாகமிழந்த மனம் கற்றவற்றை நினைவில் வைத்துக்கொள்ளாது.

## கற்பதற்கு உகந்த நேரம்

உடல் பலமும் மனதின் உள்வாங்கும் திறனும் காலைப்பொழுதில் அதிகமாக இருக்கும். இது பற்றிய பல ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளன. இந்த ஆய்வுகளின்படி விடியற்காலை 3 மணிக்கு பாடங்களைக் கற்பது உகந்ததாகும். இதற்கு நீங்கள் ஆறு மணித்தியாலங்கள் நித்திரை கொண்டிருக்கவேண்டும். உதாரணமாக, நீங்கள் விடியற்காலை மூன்று மணிக்கு எழுந்து கற்பதானால் இரவு 9 மணிக்கு நித்திரைக்குச் செல்லவேண்டும்.




ஞாபகத்திறனை அதிகரிப்பதற்கு உடல், உள ஆரோக்கியம் அவசியமாகும். இந்த ஆரோக்கியத்தில் உட்கொள்ளும் உணவுகளும் செல்வாக்குச் செலுத்துகின்றன. உணவின்றிப் பட்டினி கிடப்பதனால் மூளையின் கலங்கள் பலவீனமடைந்து நினைவுத் திறன் குறைகின்றது. இதனால், மாணவ, மாணவியர் உரிய நேரத்தில் உணவு உட்கொள்வது மிக அவசியமாகும். அத்துடன், காலை உணவை உட்கொள்ளாமல் பாடசாலைக்குச் செல்வதும் தவறாகும். பாடசாலையில் கற்பிக்கப்படும் விடயங்கள் நினைவில் நிற்காமைக்கு இதுவும் ஒரு முக்கிய காரணமாகும். உணவை உட்கொள்ளும் போது அதன் போஷாக்குப் பற்றியும் அதிக அக்கறை கொள்ளல் வேண்டும்.

அதிபோஷாக்கு உணவை உட்கொள்வதனால் உணவு சமிபாடு அடைய உடலுக்கு அதிக பலம் தேவைப்படுகின்றது. இது நினைவாற்றல் பெருகுவதற்கு ஒரு தடையாகும். இதனால், நிறையுணவை உட்கொள்வது அவசியமாகும். அதேவேளை, நினைவாற்றலைப் பெருக்கும், மூளையின் கலங்களை விருத்தி செய்யும் பல உணவு வகைகளும் உண்டு. குறிப்பாக காய்கறிகள், பழங்கள், கீரைகள் என்பனவற்றை உட்கொள்வதனால் நினைவாற்றல் பெருகும் என மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

## அக்கறையாகப் படியுங்கள்

அக்கறையும் அவதானமும் கொண்டு கற்பதே சிறந்ததாகும். வகுப்பறையில் ஆசிரியர்கள் கற்பிக்கும் பாடங்களை அவதானமாகச் செவிமடுப்பதன் மூலம் கற்பித்தவை நினைவில் நிற்கும். வகுப்பறையில் ஆசிரியர் கற்பிக்கும்போது நண்பர்களுடன் அரட்டையடித்தல், பலதரப்பட்ட விடயங்கள் பற்றிச் சிந்தித்தல் (உதாரணம் : வீட்டில் நடைபெற்ற சம்பவங்கள்) என்பனவற்றைத் தவிர்த்து கற்பிக்கப்படும் பாடங்களில் கூடிய கவனம் செலுத்துங்கள். விளக்கம் போதாத விடயங்கள் குறித்து ஆசிரியரிடம் அச்சமின்றிக் கேட்டு அறிந்து கொள்ளுங்கள்.




"எனக்கு நினைவில் இல்லை" என்ற எண்ணத்தைக் கைவிடுங்கள்.




ஒழுங்கு முறைப்படி இருப்பவை இலகுவில் நினைவில் நிற்கும்.

## ஒரே தன்மையை தவிர்த்துக்கொள்ளுங்கள்

தொடர்ச்சியாக மூன்று அல்லது நான்கு மணித்தியாலங்கள் கற்கும் வழக்கம் அவ்வளவு நல்லதல்ல. கற்றவை நிலைத்து நிற்க மூளைக்கு ஓய்வு அவசியம். தொடர்ந்து படிக்கும்போது மூளையும் உடலும் களைப்புறும். இதனால், பாடங்களைக் கற்கும்போது மணித்தியாலத்திற்கு ஒருமுறை சில நிமிடங்கள் குறுகிய ஓய்வு பெறுவது அவசியமாகும்.

## கற்பதற்கான ஆர்வத்தை வளர்த்துக் கொள்ளுங்கள்

பெற்றோர், ஆசிரியர் வற்புறுத்தலினால் அல்லது ஏனையவர்களின் அழுத்தத்திற்குட்பட்டு கற்பது நன்றன்று. சுயமாகவே சிந்தித்துக் கற்கும் ஆர்வத்தை வளர்த்துக்கொள்வது அவசியம். ஆர்வமாக, அவதானமாகப் படிப்பதன்மூலம் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெறமுடியும். அதனால், பெற்றோர், ஆசிரியர்களின் பாராட்டைப் பெறமுடியும் என்ற எண்ணம் படிப்பதற்கான ஆர்வத்தை மேலும் வளர்க்கும். அதேவேளை, நீங்கள் படிக்கும் மேசையில் கல்வியின் முக்கியத்துவத்தைக் குறிக்கும். வாசகங்களை எழுதி அவற்றை அடிக்கடி வாசியுங்கள். இதனால், கல்வி மீதான ஆர்வம் அதிகரிப்பதுடன், இது நினைவாற்றலையும் அதிகரிக்கும்.



நிறையுணவை உட்கொள்க.

## சோம்பலைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்

நித்திரை உணர்வு, சோம்பல் என்பன கற்கும்போது ஏற்படுவது வழமை. பாடங்களை குரல் எடுத்து உரத்துப் படிப்பதால் இவற்றை தவிர்த்துக் கொள்ள முடியும் அல்லது குழுவாக இணைந்து படிப்பதும் சிறந்தது. ஒரு குழுவில் மூன்று அல்லது நான்கு பேர் இருப்பது சிறந்ததாகும். விளங்காத பாடங்களைப் பற்றியே இந்தக் குழு ஆராய வேண்டும். கேள்விகளை கேட்டு, பதில்களைக் கூறி பாடங்களைப் படிக்கவும் முடியும். இது மனதில் நன்கு பதியும்.

## மீள நினைவூட்டிக் கொள்ளல்

நினைவில் பதிவு செய்யும் விடயங்களை மீள நினைவூட்டிக் கொள்ளாவிடின், அது ஞாபக மறதியையே ஏற்படுத்தும். இந்த கட்டுரையை வாசித்து சில நாட்களின் பின் இதில் குறிப்பிடப்பட்டுள்ளவை எளிதில் மறந்து விடக்கூடும். எனினும், மீளமீள நினைவூட்டிக் கொண்டே படிப்பதனால் ஞாபகமறதியை தவிர்த்துக்கொள்ள முடியும். இந்த நிலையை தவிர்க்க சுருக்கக்குறிப்புகளை எழுதி வைத்துக்கொள்வதும் உதவும்.

## ஒழுங்கின்படி இருப்பவை இலகுவில் நினைவில் நிற்கும்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள 'A', 'B' யில் குறிக்கப்படும் வரிசைக்கிரமங்களில் எது உங்கள் நினைவில் இலகுவாகப் பதிகின்றது என்பதைப் பாருங்கள்.

A - 64, 48, 21, 50, 96, 79, 01, 17

B - 22, 32, 42, 52, 62, 72, 82

A - தொலைபேசி எண் 2840539

B - தொலைபேசி எண் 2533533

மேலே கூறப்பட்டவற்றில் B வரிசையில் உள்ளவற்றை இலகுவில் நினைவில் கொள்ளமுடியும் என்பது உங்களுக்குப் புரியும். ஒழுங்குப்படி செல்லும் விடயங்களை இலகுவில் நினைவில் கொள்ள முடியும். வாய்ப்பாடு, கணித சமன்பாடுகள் என்பவற்றை நினைவில் கொள்வது சற்றுக் கடினமாகும். மேலே குறிப்பிட்ட விடயங்களைப் பின்பற்றுவது உரிய பயனைக் கொடுக்கும்.

-இ

கல்வியின் மகத்துவங்களை கண்களில் தென்படும் வகையில் எழுதி வையுங்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொக்கலேட்டுக்கு சுவைதரும்

# 'கொக்கோ'வைப் பற்றி அறிந்துகொள்வோம்



சிறியவர்கள், பெரியவர்கள் என்று அனைவரும் 'சொக்கலேட்' சாப்பிடுவதற்கு மிகவும் விருப்பம் கொள்வர். இத்தனை சுவைமிக்க சொக்கலேட்டை தயாரிப்பதற்குத் தேவையான கொக்கோவை அறிமுகப்படுத்தியது தென் அமெரிக்காவாகும். கொக்கோ ஆனது வருடத்திற்கு 3,000,000 தொன் அளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. 1974 ஆம் ஆண்டில் 1,556,484 தொன் அளவாக இருந்த கொக்கோ உற்பத்தி 2004 ஆம் ஆண்டில் 3,607,052 ஆக அதிகரிப்பைக் கண்டது.

உலகிலேயே அதிகமாக கொக்கோவை பயன்படுத்துகின்ற நாடுகளில் சுவிட்ஸர்லாந்து, பெல்ஜியம், ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகள் முன்னிலை வகிக்கின்றன.

ஒரு கிலோ சொக்கலேட்டை தயாரிப்பதற்கு 300 இற்கும் 600 இற்கும் இடைப்பட்ட அளவிலான 'கொக்கோ' விதைகள் அவசியமாகும்.



விளைகின்ற கொக்கோவை ஜப்பான், ரஷ்யா, பிலிப்பைன்ஸ், இத்தாலி ஆகிய நாடுகள் அதிகமாகக் கொள்வனவு செய்கின்றன. ஆனால், உலக அளவில் 'கொக்கோ'விற்கு இருக்கின்ற கோரலுக்கு ஏற்ப இலங்கையினால் ஒரு வீதமளவு கொக்கோவையே உற்பத்தி செய்யமுடிந்துள்ளது. இதன் விலை மட்டுமன்றி கோரல் எண்ணிக்கையும் அடிக்கடி மாறுவதுண்டு.

இலங்கையைப் பொறுத்தளவில் உரிய முறையில் சீராக கொக்கோ பயிர்ச்செய்கையை மேற்கொண்டால் கூடிய லாபத்தை ஈட்டமுடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது.



வெளிநாட்டவர்களால் இலங்கை ஆக்கிரமிக்கப்பட்ட பின்னர் அவர்களால் இலங்கையில் அறிமுகமாகிய பயிர்ச் செய்கைகளில் 'கொக்கோ' முக்கிய இடத்தை வகிக்கின்றது. 1819 ஆம் ஆண்டில்தான் 'கொக்கோ' இலங்கையில் அறிமுகமாகியது. மாத்தளை, கண்டி ஆகிய மாவட்டங்களிலேயே 'கொக்கோ' அதிகமாகப் பயிர்செய்யப்பட்டு வருகின்றது. ஏனைய பயிர்களுடனும் கலந்து பயிர்ச்செய்யக்கூடிய சிறப்புத் தன்மையையும் கொக்கோ கொண்டிருக்கின்றது.

இலங்கையில் இறப்பர் பயிர்ச்செய்கையுடன் கொக்கோ பயிர்ச்செய்கையும் கலந்து மேற்கொள்ளப்படுகின்றது. இறப்பர் விளைச்சல் அதிகம் இல்லாத பயிர்நிலங்களிலும் அதிகமான 'கொக்கோ' மரம் பயிர் செய்யப்பட்டிருப்பதையும் காணலாம். 'கொக்கோ' பயிர் செய்கைக்கு வருடாந்தம் 50 அங்குலம் மழைவீழ்ச்சி கிடைக்கப் பெறல் வேண்டும். எனினும், அளவிற்கு அதிகமான மழைவீழ்ச்சி ஏற்பட்டுவிட்டால் 'கொக்கோ' பயிர்ச்செய்கைக்கு பாதிப்பையே ஏற்படுத்திவிடும். ஏனெனில், மண்ணில் அதிகமான ஈரப்பதன் ஏற்பட்டால் பயிர்களுக்கிடையே ஒருவகை நோய் பரவிவிடும். அதுவே விளைச்சலில் பாதிப்பை ஏற்படுத்திவிடுகிறது.

இலங்கையில்

# மாணவர்களுக்கான புதிய கணினி

பாடசாலை மாணவர்களுக்காகவே வடிவமைக்கப்பட்ட புதிய 'நோட்புக்' கணினியொன்று அறிமுகமாகியுள்ளது.

'Kids Classmate' என்ற பெயரில் சந்தையில் அறிமுகப்படுத்தியுள்ள மேற்படி கணினியை கீழ்வகுப்பு மாணவர்கள் தொடக்கம் உயர் தரம் கற்கும் மாணவர்கள் வரையில் பயன் படுத்தக் கூடிய வகையில் சிறப்பு அம்சங்களுடன் இந்த கணினி அமைந்துள்ளது.

10.1 அங்குல அகலத்தைக் கொண்ட தொடுகைத் திரையைக் கொண்டுள்ள மேற்படி கணினியை வேண்டிய எந்தவொரு திசைக்கும் திருப்பிக் கொள்ள முடியும்.





குறிப்பாக, பிள்ளைகளை இது மிகவும் கவரும் வகையில் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இவற்றுடன் Intel 1.66 GH2 புரோஸர், 1GB Ram, 160 GB hard drive போன்ற வசதிகளுடன் Internal micro phone, Speakers, Video chat sofware மற்றும் 1.3 Megapixel Webcam ஆகிய வசதிகளையும் இந்த கணினி கொண்டுள்ளது.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2010, ஜூன் மாதம் 02 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday June 02, 2010.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org